
இன்பத்தை அள்ளித்தரும்
இந்துமதம்
4
தமிழறிஞர்
கே. வி. குணசேகரம்

# இன்பத்தை அள்ளித்தரும்
# இந்து மதம்

பாகம் - 04

தமிழறிஞர்
கே. வி. குணசேகரம்

# என்னுரை

இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம் என்ற தொடர்நூல் வரிசையில் இந்நூல் நான்காவதாக வெளிவருகிறது. வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், பகவத்கீதை, திருமந்திரம், குண்டலிசக்தி, அபிதான சிந்தாமணி, இதிகாச புராணங்கள், சங்ககால நூல்கள் அம்பிகையின் தோற்றம் பற்றியும், அவளது வரலாறு பற்றியும், அவளை வணங்குவதால் உண்டாகும் பயன்களைப் பற்றியும் மிகவும் விரிவாகவும், சிறப்பாகவும் கூறுகின்றன. இவற்றை அறிந்த நான் மக்களும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கில் இந்நூலை எழுதியுள்ளேன். ஆத்திசூடிக்கதைகள், திருக்குறள்க்கதைகள், பகவத்கீதைகள் என்ற தொடரில் தற்பொழுது இன்பத்தை அள்ளித்தரும் இந்து மதம் என்ற தொடரை எழுதிவருகிறேன். இந்நூல்களை அழகுறக் கணணி மயப்படுத்தித்தந்த செல்வி க. தேனமிர்தம் அவர்களுக்கும், பிரதியை ஒப்புநோக்கி எழுத்துப்பிழைகளை நீக்கித்தந்த செல்வி ப. இறைமகளுக்கும், இந்நூலை வெளியிடும் லங்கா பதிப்பகத்தினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

கே. வி. குணசேகரம்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
நல்லூர்.

பெண் தெய்வ வழிபாடு தான் சிறப்பு மிக்கது என்று கூறப்படுவது உண்மையா..? அதைப் பற்றிப் பல்வேறு இந்து மத நூல்கள் என்ன கூறுகின்றன?

வைதீக, அவைதீக சமயங்கள் யாவும் ஆன்மாவைப் பற்றியும் உலகைப் பற்றியும் பல்வேறு வகையான கொள்கைகளைக் கொண்டுள்ளன. வேத உபநிடதங்களை ஏற்கும் மதங்கள் வைதீக சமயங்களென்றும், அவற்றை ஏற்காத மதங்கள் அவைதீக சமயங்கள் என்றும் சொல்லப்படுகின்றன.

மனித இனம் தோன்றிப் பல்லாயிரக்கணக்கான வருடங்கள் கழிந்துவிட்டன. மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே ஏதோ ஒரு வகையில் கடவுளை வழிபட்டு வந்துள்ளான். ஆதியில் பயங்காரணமாகத் தாம் கண்டு பயந்தவற்றையெல்லாம் கடவுளாக நினைத்துத் தம்மைத் தீமை செய்யாது காப்பாற்றும்படி அவற்றை வேண்டியதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். இந்துக்கள் சிந்துவெளியில் நாகரிகமான வாழ்வு வாழ்ந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். எனினும் ஒரு திட்டமிட்ட வரையறைக்குட்பட்ட வழிபாடு வேதகாலத்தில் தான் ஆரம்பமானது.

மத்திய ஆசியாவில் இருந்து இந்தியாவுக்கு வந்து, சிந்துவெளியில் குடியேறிய மக்கள் புராதனமான இந்துமதத் தெய்வங்களை வழிபட்டனரென ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அவர்கள் தான் இந்து தர்மத்தையும், அதன் வழிபாட்டு முறைகளையும், சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் உருவாக்கினர் என்றும் கூறுகின்றனர். இவற்றை விளக்குவனவாக வேதங்கள் இருக்கின்றன.

கடவுள் வழிபாட்டை எடுத்துப் பார்த்தால் அதை வேதங்களிலிருந்தே அறிந்து கொள்ளல் வேண்டும். வேதங்கள் முப்பத்து மூன்று தெய்வங்களைப் பற்றியும் அவற்றின் வழிபாடுகளைப் பற்றியும் கூறுகின்றன. வேதங்களுள் முதன்மையானது இருக்கு வேதம். இதுவே முதன்மையான வேதம். இருக்கு வேதம் கிறிஸ்த்து பிறப்பிற்கு 4000 ஆண்டுகளுக்கு முன்பே உருவாக்கப்பட்டனவென்று இந்திய அறிஞரான திலகர் கூறுகிறார். வேதங்கள் உருவான காலத்தைப் பற்றி அறிஞர்களுக்கிடையே பாரிய கருத்து வேறுபாடுகள் காணப்பட்ட போதும், வேதங்களை நான்காக வகுத்தவர் வேதவியாசகர் என்பதை எந்த அறிஞரும் மறுத்துரைக்கவில்லை.

வேதவியாசகர் தான் இதிகாசங்களுள் ஒன்றான மகாபாரதத்தை எழுதியவர். கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் பீஸ்மபர்வத்தில் பதினெட்டுத் தினங்கள் போர் நடைபெற்றது. அப்போர் கி. மு 1900 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றதாக ஓர் ஆராய்ச்சியாளர் கூறுகிறார். போர் தொடங்கிய அன்று போர் புரியவெனப் போர்க்கலத்திற்கு மிகுந்த உற்சாகத்துடன் வந்த அர்ச்சுனன் தன் முன் தன்னுடன் போர்புரியவென வந்து நிற்கும் படை வீரர்களைப் பார்க்கிறான். படைகளுக்குத் தலைமை தாங்கி வந்தவர்கள் அனைவரும் அர்ச்சுனனுக்கு மிகவும் வேண்டியவர்கள். அதனால் அவனது மனம் தடுமாற்றமடைகிறது. அதனால் அவன் அவர்களுடன் போரிட மறுக்கிறான். அதை உணர்ந்த கிருஷ்ணன் அவனது மனதைத் திடம்படுத்திப் போர் செய்யும்படி கூறுவது தான் பகவத்கீதை. இப்பகவத்கீதை மகாபாரதத்தில் ஓர் அதிகாரமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்து மதத்தின்

தத்துவ நூலாகவுள்ள பகவத்கீதை வேதாந்தமான உபநிடதமாகவும் கருதப்படுகிறது.

உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை ஆகிய மூன்றையும் பிரஸ்தானத்திரயம் என்று சொல்வார்கள். முடிவான பிரமாணமான மூன்று நூல்கள் என்பதே அதன் அர்த்தமாகும். இவை மூன்றிற்குமிடையே வேற்றுமைகள் இல்லை. இவை இந்து மதத்தின் தத்துவ (சாஸ்திர) நூல்கள். இவற்றில் இந்து மதத்தின் எந்தத் தத்துவத்திற்கும் விரிவான விளக்கம் உண்டு. இந்த வகையில் பெண் தெய்வ வழிபாடு பற்றிய செய்திகளையும் இங்கு காணலாம்.

ஸத்குரு ஆதிசங்கரர் அவர்கள் தான் பல்வேறு வகையான தெய்வங்களை வழிபடும் இந்து மதத்தினரை வகைப்படுத்தி ஷன்மத ஸ்தாபனம் செய்து வைத்தார். அவரின் கோட்பாடுகளுக்கு இணங்கப் பெண் தெய்வங்களை வழிபடுவோர் சாக்த மதத்தினர் என வகுத்தார். அத்துடன் அவர் சாக்த மதத்தினராக வாழ்ந்து வந்தார்.

இந்துக்கள் இயற்கை அனைத்தையும் தாயாகக் கொண்டனர். அத்துடன் பெண்களை வயது வேறுபாடின்றித் தாயாக மதிக்கும் பண்பு இந்து சாஸ்த்திரத்தில் உண்டு. உயிர்களின் இருப்பிடம் தாய். தாயைப் போலச் சாத்த மதமும் மனிதர்களை அனுசரித்துப் போகும் இயல்புடையது. மதமும் உயிரும் ஒன்றையென்று அறிந்து அதனுடன் கலந்து உரிமையுடன் உறவாடும் நிலையை நாம் அச்சமயத்தை உபாசிப்பவர்களில் இருந்து அறிந்துகொள்ள முடியும். தயவு, தாட்சண்யம், கருணை, அன்பு, பொறுமை, பற்று, பாசம், உரிமை என்பவற்றை நாம் அறியவேண்டுமானால் நாம் தாயின் உறவிலேயே அறிந்து கொள்ள முடியும். தாயின் வடிவமாகத்

திகழும் பெண் தெய்வங்கள் வழிபடுவோரை ஈர்த்து உள்ளத்தில் இடம்பெற்றமையைப் பற்றி நாம் வரலாற்று ரீதியாக அறிந்து கொள்ள முடியும்.

உலகமும் உயிர்களும் பிரம்மத்திலிருந்தே உருவாகினவென்று வேதங்கள் கூறுகின்றன. அதை விபரமாகக் கூறுவது பகவத்கீதை. கீதையின் ஒவ்வொரு சுலோகங்களும் இதை விபரமாக விளக்கிக் கூறுகின்றது. சங்கரர் இந்து மதங்களை வேறாக்கு முன் ஆறு தெய்வங்களையும் மக்கள் வழிபட்டு வந்தனர். அவர் தெய்வங்களைத் தனித்தனியாகப் பிரித்த பின்பும் முன்பு போலவே அவை சேர்ந்தே இருக்கின்றன. அவற்றைப் பிரித்துத் தனித்தனியாக வழிபடுபவர்கள் சிலரேயாகும். எந்த மதத்திற்குரிய தெய்வத்தை வணங்குமுன் இந்துக்கள் விநாயகரை வணங்குதல் மரபு. விநாயகரை வணங்காது எக்கருமத்தையும் செய்யலாகாது. அப்படிச் செய்தால் அது நிறைவேறாது என்று இந்துமதத் தத்துவங்கள் கூறுகின்றன. அத்துடன் இந்துமதத் தெய்வங்களில் ஒரு குடும்ப உறவு இருக்கிறது. பொதுவாகக் கூறுமிடத்து இந்து மதம் ஆறு தனித்தனி மதமாகப் பிரிக்கப்பட்ட போதும் அதைப் பிரித்துப் பார்போர் மிகமிகச் சிலரே.

சக்தி வழிபாடு இரண்டு முறையில் அனுஷ்டிக்கப்படுகிறது. முதலாவது “அந்தர்முக” வழிபாடு அடுத்தது “பகிர்முக” வழிபாடு. இவற்றை அகவழிபாடு, புறவழிபாடு என்றும் கூறலாம்.

அந்தர்முக வழிபாட்டால் வழிபடுவோன் குருவின் துணையுடன் சக்தியின் அருளைப் பெறுகிறான். சக்தியின் கிருபையால் ஞானம் பெற்ற அவன் ஞானமுதிர்ச்சி பெற்றுத்

தன் உடல் வேறு, ஆத்மா வேறு என உணர்ந்து கொள்கிறான். இதனால் சக்தியைத் தவிர அவன் வேறு எதிலும் பற்று வைப்பதில்லை. அதனால் அவனைப் பற்றிப் பிடித்து ஆட்டும் ஆசை, அவா, ஆணவம் யாவும் நீங்கி விடும். அதனால் அவன் சக்தியோடு இரண்டாகக் கலந்து விடுகிறான். இதனால் சக்தியின் வடிவாக இருக்கும் 'ஸ்ரீசக்கர மகாமேரு' எனப்படும் சக்தியின் மகா வடிவ மந்திரமானது வழிபடுவோரின் உடலில் உருவாகும். இதனால் அவனது உடல் முழுவதும் சக்தியின் அம்சமாக மாறும். இதனால் அவன் கிரிகைகளை விடுத்து ஆத்மாவால் பூசை செய்வான். அதைச் சக்திக்கு அர்ப்பணிப்பான். அதனால் அவன் ஆத்மசொருப நிலையை அடைகிறான். இதனால் அவன் சக்தியாக மாறிவிடுகிறான். இதைச் சங்கரார் 'சௌந்தர்யலஹரி' என்ற நூலில் 27ஆவது சுலோகத்தில் விளக்கியுள்ளார்.

இந்த நிலையை அடைந்தவர்கள் சக்தியைப் போலவே நடந்துகொள்வார்கள். அவர்கள் பேசுவதெல்லாம் சக்தியின் மகிமையைப் பற்றியே. உண்பது, உறங்குவது, நடப்பது போன்ற செயல்கள் அனைத்தும் சக்தியின் முத்திரைகளாகவே இருக்கும். அந்தர்முக உபாசகர் பிராணாயாமத்தின் மூலம் பிராண வாயுவை மூலதாரத்திற் செலுத்தி நிஷ்டையில் இருந்து பிரம்மத்துடன் சேர்ந்துகொள்கிறான். இந்நிலையில் சக்தி மட்டுமே அவனுக்குக் காட்சி கொடுப்பாள். இதைப் பகவத்கீதையின் ஸந்யாச யோகத்தில் உள்ள 27ஆவது 28ஆவது சுலோகங்கள் இப்படிக் கூறுகின்றன.

வெளி விஷயங்களை நீக்கி, கண்களை இருபுருவங்களுக்கிடையில் நிறுத்தி, நாசி வழியாக உட்சென்று

வெளியேறும் பிராண அபான வாயுக்களைச் சமப்படுத்தி, இந்திரியங்கள், மனம், புத்தி இவைகளை அடக்கி, முத்தியைக் குறிக்கோளாகக் கொண்டு ஆசை, அச்சம், சினம் இவைகளை நீக்கி வாழ்பவன் பிரம்மமாவான்.

அடுத்துக் பகிர்முக வழிபாட்டை எடுத்தாராய்ந்தால் இவர்கள் மற்றய சமயங்களை அனுஷ்டிப்பவர்களை விட வழிபாட்டில் மிக்க உறுதியுள்ளவர்களாக இருப்பார்கள். விக்கிரக வழிபாட்டை விடுத்து 'ஸ்ரீசக்கரம்' என்னும் கோணங்களையுடைய சக்கரத்திலேயே சக்தியைக் கண்டு களிப்பர். இந்த யந்திரத்திற்கு 'மேரு' என்ற பெயரும் உண்டு. இச்சக்கரம் ஸ்ரீநகரில் கோயில் கொண்டிருக்கும் சிவசக்தியின் தரைப்படமாகும். இச்சக்கரத்தின் இரண்டு உருவங்களிலும் நாற்பத்து மூன்று முக்கோணங்கள் காணப்படுகின்றன. சக்தி தந்திரங்கள் அறுபத்து நான்கு.

சாக்த மதத்ஸ்தாபகர் கபில முனிவர். கபில முனிவரைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டுமானால் நாம் பகவத்கீதையைப் படித்தல் வேண்டும். பகவத்கீதையின் வீபூதி யோகத்தில் இறுபத்தாறாவது சுலோகம் இப்படிக் கூறுகிறது.

அச்வத்த: ஸர்வவ்ருÑாணாம் தேவர்ஷீணாம் ச நாரத: ட
கந்தர்வாணாம் சித்ராத: ஸித்தானாம் கபிலோ முனி: டட

மரங்களுள் நான் அரசமரம்; தேவரிஷிகளுள் நான் நாரதர்; காந்தர்வர்களுள் நான் சித்திராதர்; சித்தர்களுள் நான் கபிலமுனி.

தர்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம் ஆகியவற்றைப் பிறப்பிலிருந்து பெற்றவர்கள் சித்தர்கள். இத்தகைய சித்தர்களில் ஒருவராகிய கபிலமுனிவரே சாங்கிய

மதத்தத்துவங்களை உலகிற்களித்தவர். இவர் மஹாவிஷ்ணுவின் அவதாரங்களில் ஒருவர் எனப் பகவத்கீதையில் பகவான் மஹாவிஷ்ணு கூறுகிறார். நித்திய சித்தராகக் கபிலமுனி இருந்தமையால் மஹாவிஷ்ணு அவரைத் தனது அவதாரமாக ஏற்றுக்கொண்டார். இதன் படி உலகையும் உயிர்களையும் படைத்ததாகக் கூறும் மகாவிஷ்ணு, தான் கபிலமுனியாக அவதரித்துச் சாக்கிய மதத்தை உருவாக்கியதாகக் கூறுகிறார். அதனால் சாக்கிய மதம் மஹாவிஷ்ணுவால் உருவாக்கப்பட்டதென்றும், அது வேதகாலத்திலேயே தோற்றுவிக்கப்பட்டதென்றும் புலனாகிறது.

இதைவிட விபூதி யோகத்தின் முப்பத்துநான்காவது சுலோகம் இப்படிக் கூறுகிறது.

ம்ருத்யு: ஸர்வஹரஸ்சாஹம் உத்பவஸ்ச பவிஷ்யதாம் ட

கீர்த்தி: ஸ்ரீர்வாக்ச நாரீணாம்ஸ்ம்ருதிர்மேதா த்ருதி: Ñமா டட

அனைத்தையும் அழிக்கும் மரணம் நான்; செல்வத்தில் வளர்செல்வம் நான்; பெண்மைக்குள் புகழ், திரு, சொல், நினைவு, அறிவு, திண்மை, பொறையாக நான் இருக்கிறேன். 34.

திருமகள் வாழும் இடத்தில் செல்வம் பெருகிக்கொண்டே இருக்கும். திருமகளும் திருமாலும் ஒருவர் என்று வைணவ சமயம் கூறுகிறது. இதன்படி எங்கு செல்வம் இருக்கிறதோ அங்கு திருமாலும், திருமகளும் வீற்றிருப்பர்.

இதை விளக்கப் பகவத்கீதையின் விபூதியோகத்தில் உள்ள நாற்பத்தியோராவது சுலோகத்தைப் படித்தல் வேண்டும்.

யத்யத்விபூதிமத்ஸத்வம் ஸ்ரீமதூர்ஜிதமேவ வா ட

தத்ததேவாவகச்ச த்வம் மம தேஜோம்சஸம்பவம் டட

பெருமையும், அழகும், வலிமையும் உடையன எவை எவையோ அவையெல்லாம் என்னிடத்திலிருந்து உண்டானவை என்பதை அறிந்து கொள்வாயாக.

மகிமையும் அழகும் வலிமையும் உடையது எதுவோ அதெல்லாம் எனது பிரபையின் ஒரு பகுதியென்று பகவான் மகாவிஷ்ணு கூறுகிறார். அவை யாவும் ஈஸ்வர விபூதிகள் என்று கொள்ளப்படுகிறது. சக்தி சொல்வன்மையாகப் பரிணமிக்கும் போது அவள் வாணியெனப் பெயர் பெறுகிறாள். முன்பு நிகழ்ந்தவற்றை நினைத்துப் பார்ப்பது நினைவு. நினைவு நீண்டு நெடிது தெளிந்திருப்பது சக்தியின் பிரபாகம் ஆகும். இந்த வகையில் பெண்மைக்குள், தான் புகழ், சொல், நினைவு, அறிவு, திண்மை, பொறையாக இருப்பதாகப் பகவான் கூறுகிறார். எனவே பெண்மையும் தான் தான் என்று பகவான் கூறுகிறார்.

பகவத்கீதை பிரஸ்தானத் திரயங்களில் ஒன்று. அது வேதத்தின் சாரம் என்றும் சொல்லப்படுகிறது. எனவே பெண்தெய்வ வழிபாடு வேதகாலத்திலேயே தொடங்கிவிட்டது. வேதகாலத்தில் முப்பத்து மூன்று தெய்வங்கள் வழிபடப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதில் பெண் தெய்வங்களும் உண்டு. இருக்கு வேதத்தில் உஷை, இராத்திரி, அதிதி, பிருதுவி போன்ற பெண் தெய்வங்கள் வழிபடப்பட்டன. இவற்றை வழிபடுவதன் மூலம் இந்திரப்பதவி கிட்டும் என்று வேதம் கூறுகிறது. வைதீக முறையில் பெண்தெய்வ வழிபாட்டு முறையை ‘தட்சணாசரம்’ என்று அழைப்பர். இவ்வழிபாட்டில் காயத்திரி மந்திரம் ஓதப்பட்டது.

வேதத்தில் உஷை தனிப்பெருந் தெய்வமாக வர்ணிக்கப்படுகிறாள். இவளை வழிபடுபவர்களுக்குச் செல்வம், புகழ், இன்பமான நீண்ட நாள்வாழ்வு, பெருமைகள், தீயவற்றிலிருந்து பாதுகாப்புப் போன்றவற்றை இவள் வழங்குவாள் என்று இருக்கு வேதப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. இதைவிடச் 'சண்டிகை' என்பவளை வழிபடும் வழிபாடுகளைப் பற்றியும் இருக்கு வேதம் கூறுகிறது. இச்சண்டிகை, துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய மூன்று பெண்தெய்வங்கள் என்று கூறுவாருமுளர். வேத வேத்யா, வேதஜனனி, யக்ஞபியா, யக் ஞருபா, திரயி என்ற பெயர்கள் மூலம் சண்டிகை குறிக்கப்படுகிறாள் என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர். இயற்கையைப் பெண்ணாக உருவகித்துப் பல வேதப்பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. முக்கியமாகப் பாய்கின்ற நதிகளைச் 'சரஸ்வதி' என்றும், 'கங்காதேவி' என்றும் உருவகித்துப்பாடிய பாடல்கள் இருக்கு வேதத்தில் உண்டு.

இதைவிடப் பிரஸ்னா உபநிடதம் பிப்பிவாதர் என்ற குரு தனது ஐந்து சீடர்களுக்குச் செய்யும் உபதேசமாக அமைந்துள்ளது. இதில் கௌசல்யா என்ற பெண்ணும் அடங்குவள். வேதகாலத்திலும் அதற்குப் பிந்திய காலங்களிலும் பெண்கள் கல்வி பெறுவதில் ஆர்வங்காட்டினர். அத்துடன் வேதகாலப் பாடலாசிரியர்களுள் பெண்களும் இருந்தனர். இதன் மூலம் பெண்கள் மதிக்கப்பட்டதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

இந்துமத வழிபாடு என்றதும் நாம் ஆய்வுக்காக முதலில் எடுத்துக் கொள்வது சிந்துவெளியையே. சிந்துவெளி நாகரிகத்திற்கு முற்பட்ட காலத்திற் கூட பெண்தெய்வ வழிபாடு

இருந்ததாகச் சேர் ஜோன் மார்சல் போன்ற ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அங்கு பல பெண்தெய்வங்களின் உருவச்சிலைகள் பெறப்பட்டுள்ளன. அவற்றை ஆராய்ந்த அறிஞர்கள் சிந்து வெளிநாகரீகத்திற்கு முன்பு அவை மக்களால் வழிபடப்பெற்ற பெண் தெய்வங்கள் என்று கூறுகின்றனர். அத்தெய்வச் சிலைகளிற் சில சாந்தமான உருவைக் கொண்டவையாக இருக்கின்றன. சிலகோரமான உருவைக்கொண்டவையாக இருக்கின்றன. சாந்தமான உருவைக் கொண்டவை திருமகள், கலைமகள், மலைமகள், கௌரி போன்றன என்றும், அவை இன்றும் வழிபடப்படுகின்றன என்றும் கூறியுள்ளனர். கோரமான வடிவமுடைய சிலைகளை காளி, துர்க்கை போன்ற தெய்வங்களுக்குரியன என்றும், அவையும் இன்றும் வழிபடப்படுகின்றன என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். சிந்துவெளிக்காலத்தில் பூமி, ஆறு, கடல் போன்றவற்றைத் தாயாக உருவகித்து வணங்கியுள்ளனர் என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே இறை வணக்கம் உருவாகியிருத்தல் வேண்டும். அப்பொழுதிருந்தே பெண்தெய்வ வழிபாடும் இருந்திருக்கிறது என்று கூறுவோருமுளர்.

சிவனும் சக்தியும் ஒருபோதும் பிரிந்திருப்பதில்லை என்று சைவசித்தாந்தம் கூறுகிறது. இதை அர்த்த நாரீஸ்வரத் தோற்றம் உணர்த்துகிறது. மூன்று வயதில் தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர் இத்தோற்றத்துடனே சிவனைக் கண்டமையாற்றான் “தோடுடைய செவியன்” என்ற தேவாரத்தைப் பாடினார். தோட்டைப் பெண்கள் காதில் ஓர் ஆபரணமாக அணிவார்கள். ஆண்கள் காதில் ஆபரணம்

அணியும் வழக்கம் அந்நாளில் இருந்தது. அதைக் ‘கடுக்கன்’ என்று பழந்தமிழ் நூல்கள் சொல்கின்றன. சிவன் தனது இடக்காதில் தோடு அணிந்திருந்தமையைக் கண்ட திருஞானசம்பந்தர் சிவனைச் சக்தியுடன் சிவசக்தியாகக் கண்டு தான் அத்தேவாரத்தைப் பாடியுள்ளார். இதை விட இதிகாச புராணங்கள் சிவனைத் தனியாக எப்பொழுதும் கண்டதில்லை. அவர் தனது அடியார்களுக்கு அருளச் சக்தியுடனேயே காட்சி கொடுப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. பெரியபுராணம் சிறப்பித்துக் கூறும் அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் சிவன் உமாதேவியாருடன் இடப வாகனத்தில் தோன்றியே அவர்களுக்கு முத்தி கொடுத்தார். சக்தியின்றிச் சிவம் இயங்கமாட்டாது என்று சௌந்தரலகரியில் சங்கரர் கூறுகிறார்.

சங்கரர் வைதீக மதங்களை ஆறாகப் பிரித்தார். அவற்றிற்கான தத்துவங்களையும் வணக்க முறைகளையும் வகுத்தவர். ஆனால் அவற்றைத் தனித்தனியாக வணங்கும் பிரிவினர் மிகக் குறைவென்றே கூறலாம். ஆதியில் வைணவர்களும் சைவர்களும் வணக்க முறைகளில் பெரும் தர்க்கப்பட்டனர். மஹாவிஷ்ணுவின் கோயிலுக்குச் செல்லும் வீதியால் கூட சைவர்கள் செல்வதில்லை. அதுபோலச் சிவன் கோயில் வீதியால் கூட வைணவர்கள் செல்வதில்லை. இரு மதத்தினரிடையேயும் பெரும் சண்டைகள் நடைபெற்றன. அதற்கு உதாரணமாகப் பல கதைகளைக் கூறலாம். காளமேகப் புலவர் பெரும் விஷ்ணு பக்தர். அவர் திருவரங்கத்திற்குத் தினமும் சென்று அரங்கப் பெருமானை வழிபட்டு வந்தார். திருவரங்கத்திற்கு அருகே திருவானைக்கா

என்ற சிவாலயம் இருந்தது. திருவானைக்காவில் பல தேவதாசிகள் இருந்து ஆடிப்பாடிச் சிவனை வழிபட்டனர். அவர்களுள் மோகனாங்கியும் ஒருத்தி. அவளின் அழகில் மையல் கொண்ட காளமேகம் அவளைக் காதலித்தார். அவளும் காளமேகத்தைக் காதலித்தாள். இருவரது காதலையும் அவளது தோழிகள் அறிந்திருந்தனர். இந்நிலையில் மார்கழி பிறந்தது. சம்புகேசுவரர் கோயிலில் மோகனாங்கியும் தோழிகள் பலரும் சேர்ந்து திருவெம்பாவைப் பாடலைப் பாடிக்கொண்டிருந்தனர்; ‘உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்’ என்ற பாடலை அவர்கள் பாடினர். அப்பாடலில் ‘எம்கொங்கை, நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க’ என்ற அடியை மோகனாங்கியாற் பாடமுடியவில்லை. அதனால் அவளது தோழிகள் “காளமேகப்புலவரைத் திருமணம் செய்யாதே” என்றனர்.

அன்று இரவு காளமேகப்புலவர் மோகனாங்கியின் வீட்டிற்கு வந்த போது அவளின் வீட்டுக் கதவு பூட்டப்பட்டிருந்தது. மோகனாங்கியின் வேலைக்காரி; “எனது எஜமானி வைணவரின் உறவைத் துண்டித்து விட்டார். அதனால் நீர் இனி இங்கு வரவேண்டாம்” என்று கூறினாள்.

காளமேகப்புலவரால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. சிவபக்தையான அவளைத் திருமணம் செய்ய அவளது தாய் விடமாட்டாள் என்பதையும், தனது குடும்பத்தினரும் அதை ஏற்க மாட்டார்கள் என்பதனையும் புரிந்து கொண்ட காளமேகப்புலவர் மறுநாள் எழுந்து

முழுகிவிட்டு நீறணிந்து அரங்க நாயகரின் கோயிலுக்குச் சென்று சிவதீட்சை பெற்றுச் சைவரானார்.

அன்று இந்துதமங்கள் வேற்றுமைப்பட்டிருந்தன. அதைச் சங்கரர் உணர்ந்து செயற்பட்டபோதும் அதற்கான பயன் இன்று வரை கிடைக்கவில்லையென்றே கூறுதல் வேண்டும்.

விநாயகரை வழிபடுவோர் காணாபத்தியர். ஆனால் இந்து மதத்தில் மட்டுமல்லாது சைன சமயத்தினரும், பௌத்த சமயத்தினரும் விநாயகரை வணங்குகின்றனர். வைதீக சமயச் சடங்குகள் யாவும் விநாயகரை வணங்கிய பின்பே தொடங்கப்படுகின்றன. சிவன் கோயிலாக இருந்தாலென்ன, விஷ்ணு கோயிலாக இருந்தாலென்ன, சக்தி பீடங்களாக இருந்தாலென்ன அங்கெல்லாம் முதற்பூசை விநாயகருக்கே நடைபெறுகிறது. இதை விடச் சங்கரர் கூறிய ஆறு தெய்வங்களும் இந்துமதங்கள் அனைத்திலும் வணக்கத்திற்குரிய தெய்வங்களாகவுள்ளன. அத்துடன் உறவுகாரராகவும் உள்ளன. சிவனதும் சக்தியினதும் பிள்ளைகள் தான் முருகனும், விநாயகரும். உமை மஹாவிஷ்ணுவின் சகோதரி. சூரியன் சிவனதும் விஸ்ணுவினதும் உறவினன். இப்படியாக இருக்கும் போது இவ் ஆறு மதங்களையும் தனித்தனியே பிரித்துக்காண முடியாது. இந்து மதத்தினர் இவ் ஆறு தெய்வங்களையும் இன்றும் போற்றி வணங்குவதை நாம் காண்கின்றோம்.

சாதாரண மனித வாழ்க்கையில் ஒரு விருந்திற்கு ஒருவரை அழைப்பதானால் கூட நாம் அவரைக் குடும்பத்துடன் தான் அழைக்கிறோம். அதுபோலவே நாம் வணங்கும் போதும் அனைவரையும் வணங்குகிறோம். தேவருலகில் எந்த

வைபவத்திலும் இவர்கள் எல்லோரும் கலந்து சிறப்பிப்பர். ஒருவர் கலக்காவிட்டாலும் அவ்வைபவம் முழுமை அடையாது.

பிரஸ்னா என்ற உபநிடதத்தில் ‘எங்கிருந்து இந்த உயிர்கள் வந்தன’ என்று காத்யாயனர் பிப்பிவாதரைக் கேட்கிறார். அதற்குப் பிப்பிவாதர் இப்படிச் சொல்கிறார்; ‘‘பிரஜாபதியாகிய பிரம்மத்திலிருந்தே அனைத்தும் தோன்றின. இருப்பினும் பிரஜாபதி இதில் நேரடியாகப் பங்கு கொள்வதில்லை. பல ஆயிரம் வருடங்களாகப் பிரஜாபதி தனித்திருந்து தவஞ் செய்த பின்பே படைப்புத் தொழிலைச் செய்தார். அந்த எண்ணம் அவருக்குத் தோன்றியதே தவிர அவரால் உயிர்களைப் படைக்க முடியவில்லை. மீண்டும் அவர் தவம் செய்தார். அத்தவத்தின் பயனாக இரு பொருட்கள் தோன்றின. அவற்றில் ஒன்று ஆண்; அடுத்தது பெண். இதில் ஆண் சக்தி, பெண் வஸ்து. அந்த வஸ்து உடலை உருவாக்க, சக்தி பிராணை வழங்கியது. சக்தி சூரியனுடன் தொடர்பு கொண்டது, வஸ்த்து சந்திரனுடன் உறவு கொண்டது. இந்த இணைப்பின் மூலமே உயிர்கள் தோன்றின’ என்றார்.

இதிலிருந்து உலகைத் தோற்றுவிக்கச் சிவனால் மட்டும் முடியாது. சக்தியும் சேரவேண்டும். என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. தமிழில் உள்ள முதுமொழிகளைப் பார்த்தாலும் தாய்மைக்கே முன்னுரிமை கொடுக்கின்றன.

‘‘மாதா பிதா குரு தெய்வம்’’ என்றும் ‘‘அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வங்கள்’’ என்றும் கூறுகின்றன.

சாக்த சமயம் இதை அழகாகக் கூறுகிறது. சிவன் உலகத்தோற்றத்திற்குக் காரணமானவன். சக்தி அதை இயக்குபவள். உலக இயக்கத்திற்குச் சக்தியே காரணமாகும்.

அச்சக்தியைப் பெண்ணாகக் கொள்வது சாக்தமதம். இதனால் இவர்கள் சக்தியைத் தனித் தெய்வமாகக் கருதிச் சக்தியை மட்டுமே வழிபடுகின்றனர். ஆனால் இவர்கள் வழிபடும் பெண் தெய்வங்கள் அனைத்திலும் ஆண் தெய்வங்கள் கலந்திருக்கின்றன என்பதை இவர்கள் எண்ணத் தவறுகின்றனர். அத்துடன் சக்தி பீடங்கள் அனைத்தையும் உருவாக்கியவர் சிவபெருமான்.

பராசக்தியான தாட்சாயணி, தக்கனின் மகளாகப் பிறக்கிறாள். உரிய வேளையில் சிவன் தோன்றி அவளைத் திருமணம் செய்கிறார். முழுமுதற் கடவுளான சிவன் தனது மகளின் கணவன் என்று நினைத்து அகங்காரங்கொண்ட தக்கன், சிவனை மதியாது பெரியதொரு யாகம் செய்கிறான். அதைப்பற்றி அவன் சிவனைத் தவிர்ந்த மற்றைய தெய்வங்களுக்கும், தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் அறிவிக்கிறான். தந்தை செய்யவுள்ள பெரும் யாகத்தைக் கண்டுகளிக்க தாட்சாயினி சிவபெருமானிடம் அனுமதி கேட்கிறாள். சிவன் அதற்கு உடன்படாததால் அவள் சிவனுடன் கோபித்துக்கொண்டு யாகத்திற்குச் செல்கிறாள். மகளென்றாலும் தான் அழையாமல் வந்ததைத் தக்கன் விரும்பவில்லை. அதனால் தக்கன் அவளை அவமதிக்கிறான். இதனால் அவமானமடைந்த தாட்சாயினி, தக்கன் செய்த யாககுண்டத்தில் குதிக்கிறாள். இதை அறிந்த சிவபெருமான் கடுஞ்சினமுற்று வீரபத்திரரை அனுப்பித் தக்கனது யாகத்தை அழிப்பிக்கின்றார். அத்துடன் அங்கு வந்து யாககுண்டத்தில் வெந்துகொண்டிருந்த தட்சாயினியின் உடலைத் தூக்கிச் சிரசின் மேல் வைத்து ஆவேசமாகச் சுழன்று சுழன்று நடனமாடினார். இதனால் தேவர்கள் அஞ்சி நடுநடுங்கினர். ஆறுகள் பொங்கின;

எரிமலைகள் வெடித்தன. இதனாற் பயந்த தேவர்கள் காத்தற் கடவுளாகிய திருமாலிடம் சென்றனர். திருமால் தனது சக்கராயுதத்தை ஏவித் தாட்சாயினியின் உடலைத் துண்டுகளாக்கினார். சிவன் நடனமாடிய வேகத்தில் பராசக்தியின் உடலின் பாகங்கள் பாரத நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் விழுந்தன. அவையே சக்தி பீடங்களாகின.

இச்சக்தி பீடங்கள் ஐம்பத்தொன்று என்றும், நூற்றெட்டு என்றும் சாக்த மதத்தினர் கூறுவர். 'பீடநிர்மயா' என்ற நூல் ஐம்பத்தொரு சக்தி பீடங்களைப் பற்றிச் சிறப்பாகக் கூறுகிறது. இச்சக்தி பீடங்களைப் பற்றித் திருமந்திரமும் கூறுகிறது.

இதை விடச் சக்தி பீடங்கள் உருவாவதற்கு இன்னொரு கதையும் கூறப்பட்டுள்ளது. தக்கன் அவமதித்ததால் யாக யாககுண்டத்திற் குதித்து மாண்டு போன தாட்சாயினியின் உடலைத் தூக்கிக் கொண்டு பாரததேசமெங்கும் திரிந்த சிவன், மஹாவிஷ்ணுவின் வேண்டுதலை ஏற்று அன்னையின் கலைகளைப் பாரதமெங்கும் தனித்தனிப் பீடமாக உருவாக்கினார். அங்ஙனம் உருவாக்கிய பீடங்களில் தானும் சேர்ந்து அமர்ந்து கொண்டார். இப்படிச் சிவனால் உருவாக்கப்பட்டவையே நூற்றெட்டுப் பீடங்கள் என்றும் அக்கதை கூறுகிறது. இப்பீடங்களின் மகிமைகளைப் பற்றித் தேவி பாகவதத்தில் வியாசர் மிகவும் விரிவாகக் கூறியுள்ளார். இதைவிடச் சிவன், தேவியின் உடலைத் தூக்கிக்கொண்டு பாரத தேசமெங்கும் திரிந்த போது உயிர்களின் நன்மை கருதியும், தேவியின் மகிமைகளை உலகிற்கு உணர்த்தவும் விரும்பிய திருமால் தேவிக்காகத் தனிப்பீடங்கள் நூற்றெட்டை

உருவாக்கியதாக 'அபிதான சிந்தாமணி' என்ற நூல் கூறுகிறது.

ஆரம்பத்தில் கிராமிய வழிபாடாக இருந்த சக்தி வழிபாடு, பின் வளர்ச்சியடைந்து ஆகம முறைப்படி கட்டடங்கள் அமைத்து பிரதிட்டை செய்து பூசைகள் நடைபெறும் பெருங் கோயில்களாயின. சக்தியை நவசக்தியாகப் பாவணை செய்து ஸ்ரீ சக்கரத்தில் அமர்த்திப் பூசைகள் செய்து சாத்தர்கள் வழிபடுவார்கள்.

இது தவிர காளி, மாரியம்மன், நீலி போன்ற தெய்வங்களை மனிதர்கள் தமது தேவைக்கேற்ப உருவாக்கித் தாமே பூசைகள் செய்து வழிபடும் மரபு கிராமங்களில் இன்றும் உண்டு. இக்கிராமியத் தெய்வங்களுக்கு மாமிசமும் மதுவும் படைக்கும் வழக்கம் பண்டு தொட்டு இன்று வரை நிலவி வருகிறது. சில தெய்வங்களுக்கு மிருகங்களையும் பறவைகளையும் பலியிடும் வழக்கம் இருக்கின்றது. சில சமயங்களில் நரபலியிட்டும் வணங்குகிறார்கள். சாக்தர்கள் காளிக்குப் படைக்கப்பட்ட மதுபானங்களையும், மாமிசங்களையும் ஆகுதி யாகக் கருதி உண்டு வந்தமையையும் காணக்கூடியதாக இருக்கிறது. இதைப் பழந்தமிழ் நூலான திருமந்திரம் கண்டிக்கிறது.

"சக்தியை வேண்டிச் சமயத்தோர் கள் உண்பர்.
சக்தி அழிந்தது தம்மை மறந்ததால்
சக்தி சிவஞானம் தன்னில் தலைப்பட்டுச்
சக்திய ஞான ஆனந்தத்தில் சார்தலே"

"உயிர்களுக்குப் போகங்களை வழங்குபளே! உயிர்களை நேசித்து அவற்றுக்காகச் சகல செல்வங்களையும்

நல்குபவளே! உயிர்களுக்கு அடைக்கலம் தருபவளே! மூன்று கண்களை உடைய கௌரிதேவியே! உன்னைப் போற்றுவோரும், வணங்குவோரும் பேரின்ப வாழ்வைப் பெறுவர்'' என்று மார்க்கண்டேய புராணம் சக்தியை வழிபடுவதால் உண்டாகும் நன்மைகளைப் பற்றிக் கூறுகிறது.

அடுத்து இதிகாசங்களில் பெண்தெய்வ வழிபாட்டை எடுத்துக்கொண்டால் மகாபாரதத்தில் பாண்டவர்களும் கௌரவர்களும் துர்க்கையைத் துதிப்பதாகப் பல செய்யுள்கள் உள்ளன. பாண்டவர்களும் கௌரவர்களும் காளியை வணங்கிக் களப்பலி கொடுத்ததாகவும் செய்திகள் உண்டு. பதினெண் புராணங்களை எடுத்துக்கொண்டால், பல புராணங்களில் சக்தி, சக்தி மிகுந்த தெய்வமாகப் போற்றப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. அசுரர்கள் தேவர்களைக் கொடுமைப்படுத்திய போது தேவர்கள் உமாதேவியாரிடம் சென்று முறையிட்டதாகவும், உமாதேவியார் தேவர்களை அழைத்துச் சென்று சிவபெருமானிடம் தேவர்களைக் காப்பாற்றுமாறு கூறிச் சிவனுள்க் கலந்ததாக லிங்கபுராணம் கூறுகிறது.

துவரபரயுகம் முடிந்து கலியுகம் ஆரம்பமான போது மக்கள் அனைவரும் சோமேஸ்வரனின் ஆலயத்திற்குச் சென்று அவனைத் தரிசித்தனர். அங்கு சென்று தரிசித்த பாவிகள், நீசர்கள் எல்லோரும் சோமேஸ்வரனின் அருளால் தேவருலகத்திற்குச் சென்றனர். இதனால் தேவருலகம் நிரம்பி வழிந்தது. சோமேஸ்வரனைத் தரிசித்தால் எல்லாப் பாவங்களும் நீங்கிவிடும். இதனால் மக்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டிருப்பதைக் கண்ட இந்திரன்,

மகேஸ்வரனிடம் முறையிட, மகேஸ்வரன் பார்வதியிடம் முறையிடுமாறு கூறினார். இந்திரனின் முறைப்பாட்டைக் கேட்ட பார்வதி தேவி தனது உடலைக் கையால் தடவினார். அப்பொழுது நான்கு கரங்களுடனும் ஆனைமுகத்தோடும் விநாயகர் தோன்றினார். அவரைக் கண்ட பார்வதிதேவி; “விநாயகா நீசென்று சோமேஸ்வரனைத் தரிசிக்க வருவோருக்கு எல்லையில்லாத இன்பங்களைக் கொடுத்துச் சோமேஸ்வரனைத் தரிசிக்காமற் செய். எவனொருவன் தனக்கேற்படும் இன்பங்களைத் தவிர்த்து சோமேஸ்வரனைத் தரிசிக்கின்றானோ அவன் சொர்க்கத்திற்கு வரட்டும்” என்றார். இப்படி ஸ்கந்த புராணம் கூறுகிறது. சிவபுராணமும் சிவமகா புராணமும் சிவன் சக்தியோடு சேர்ந்த பின்பு தான் உலகை உய்விக்கும் திருவிளையாடல்களைப் புரிந்ததாகக் கூறுகின்றன. பகவத்கீதை கூறும் சக்தியின் தத்துவத்தைச் சிவபுராணமும், சிவமகா புராணமும் கூறுவதைத் தெளிவாக உணரலாம். இதை விட மார்கண்டேய புராணம் சக்தியின் பெருமைகளை விதந்து கூறுகிறது; “உயிர்கள் எல்லாவற்றிலும் உறைந்திருந்து இயக்கும் சக்தியே, உன்னைப் போற்றி வணங்குகிறேன். மங்களமாக உள்ளவற்றுள் மங்களம் நீயே! உயிர்களுக்கு என்றும் எப்பொழுதும் நன்மைகளை அள்ளிக் கொடுப்பவளே! உயிர்களுக்குப் போகங்களை வழங்குபவளே! உயிர்களை நேசித்து அவற்றிற்காகச் சகல செல்வங்களையும் நல்குபவளே! உயிர்களுக்கு அடைக்கலம் தருபவளே! மூன்று கண்களை உடைய கௌரிதேவியே! உன்னைப் போற்றுவோரும், வணங்குவோரும் பேரின்ப வாழ்வைப் பெறுவார்” என்று

மார்க்கண்டய புராணம் சக்தியை வழிபடுவதால் உண்டாகும் நன்மைகளைப் பற்றிக் கூறுகிறது.

சங்க இலக்கியங்களை எடுத்துக்கொண்டாலும் அவற்றில் பெண்தெய்வ வழிபாட்டிற்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டு ள்ளதை அறியலாம். மணிமேகலையிலும், சிலப்பதிகாரத்திலும் பெண்தெய்வ வழிபாடு இருந்தமைக்கான குறிப்புக்கள் உள்ளன. சங்க காலத்தில் கொற்றவை என்ற பெயரில் தாய்த் தெய்வமான சக்தி வழிபாடு நடைபெற்றது. கொற்றவையைச் சிலப்பதிகாரம் ‘காளி’ என்றும், ‘ஆடல்கண்டருளிய அணங்கு’ என்றும் கூறுகிறது. கோவலனும் கண்ணகியும் சிலம்பு விற்பதற்காக மதுரைக்குச் சென்ற போது வேடர்களுடன் சேர்ந்து கொற்றவையின் கோயிலில் பூசை செய்ததாகவும், பின் அங்கு தங்கியிருந்ததாகவும் சிலப்பதிகாரம் கூறுகிறது. ஆனால் வழக்குரைகாதையில் இளங்கோவடிகள் கொற்றவையை வேறாகவும் காளியை வேறாகவும் சிறப்பித்துக் கூறியதையும் நாம் நோக்குதல் வேண்டும். சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியோரில் சிலர் காளி தான் கண்ணகியாக அவதரித்தாள் என்றும் எழுதியுள்ளனர். ஆனால், ‘இந்து சமயத் தெய்வமொன்று சமண சமயத்தில் அவதரித்திருக்குமா..?’ என்று வினா எழுப்புவோரும் உள்ளனர். தமிழக நிலப்பரப்பு சங்ககாலத்தில் ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு நிலத்திற்கும் ஒவ்வொரு தெய்வங்கள் காவற்தெய்வங்களாக இருந்தன. இந்த வகையில் பாலை நிலத்திற்குக் காளி தெய்வமாக இருந்தாள். பாலை நில மக்கள் காளியை வழிபட்டனர். ‘காடுகிளாள்’, காடு கிழவோள், காடுகாள்’ என்று சங்க இலக்கியங்கள் காளியை விதந்து கூறுகின்றன.

தாய்த்தெய்வ வழிபாடு பற்றித் தேவாரங்கள் சிறப்பாகக் கூறுகின்றன. நாயன்மார்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் தாய்த் தெய்வமான பராசக்தியைப் பற்றிப் பல தேவாரங்களை அருளியுள்ளார். நாயன்மார்கள் சிவபெருமானை நினைத்துப்பாடிய தேவாரங்களில் சிவபெருமான் உமாதேவியாரைத் தனது இடப்பாகத்திலிருத்தி இடப வாகனத்தில் இருப்பதாகப் பாடியுள்ளனர். இது தவிர மணிமேகலை காளியைக் ''காடமர் செல்வி'' என்றும், கலித்தொகை காளியை ''பெருங்காட்டுக்கொற்றி'' என்றும் திருமுருகாற்றுப்படை முருகனை ''வெற்றிவேற் கொற்றவை சிறுவ'' என்றும் கூறுகிறது.

தாய்த்தெய்வ வழிபாடு சங்காலத்தைவிடச் சோழர் காலத்தில் சிறப்புற்றிருந்ததை அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களினூடாக அறிந்து கொள்ள முடிகின்றது. சோழர்கள் தாய்த் தெய்வத்தின் கோயில்களை ''திருமுற்றம்'' என அழைத்தனர். சங்ககாலத்தில் கொற்றவை என வணங்கப்பட்ட பெண் தெய்வம், சோழர் காலத்தில் துர்க்கையுடன் சேர்த்து வணங்கப்பட்டாள். சங்க காலத்தில் கொற்றவை என்று வணங்கப்பட்ட பெண் தெய்வத்தை, 'முதியோள், பழையோள்' என்ற பெயராலும் தமிழர் வணங்கினர். நாயன்மார்கள் பெண் தெய்வத்தை 'போகார் மோடி, கடற்கோடியின் மோடி' என்றும் 'முது கோதை' என்றும் தேவாரங்களிற் பாடியுள்ளனர்.

சங்ககாலம், சங்கமருவிய காலப் பகுதியில் கொற்றவை என வணங்கப்பட்ட பெண்தெய்வம் பிற்காலத்தில் வெவ்வேறு

பெயர்களில் வணங்கப்பட்டதை நாம் இலக்கியங்களில் இருந்து அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. சோழ மன்னர்கள் தமக்கு வீரத்தையும், வெற்றியையும் தருபவள் அம்பிகையென்று நினைத்து அவளுக்கு "நிதம்ப சூதனி" என்ற நாமமிட்டு வழிபட்டனர். இம்மன்னர்கள் எக்கருமத்தை ஆரம்பிப்பதானாலும் நிதம்ப சூதனிக்குப் பெரு விழா எழுத்த பின்பே ஆரம்பித்தனர். இது போலப் பாண்டிய மன்னர்களும் பெண்தெய்வமான உமாதேவியாரை 'மீனாட்சி' என்ற நாமமிட்டு வணங்கினர். மதுரை நகரம் மீனாட்சியால் உருவாக்கப்பெற்றதென நம்பினர். அதனால் மதுரையின் தலைவியாக அவளை எண்ணிப் பெரியதொரு ஆலயம் அமைத்தனர். இன்றுள்ள பெண் தெய்வ ஆலயங்களுள் இதுவே மிகப் பெரியதும், சரித்திரப் புகழ் பெற்றதுமாகும். மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பாண்டியமன்னர்கள், மதுரை மீனாட்சியம்மனிடமிருந்து செங்கோலைப் பெற்று ஆட்சி செய்ததாகக் குறிப்புக்கள் உண்டு. மதுரை மீனாட்சியம்மன் கோயிற் சுவரின் வரைந்த சித்திரமொன்றில் பாண்டிய மன்னன் திருமலை நாயக்கர் மதுரை மீனாட்சியிடமிருந்து செங்கோலைப் பெறும் காட்சியைக் காணலாம்.

இந்தியாவில் மட்டுமல்லாது இந்து சமயம் பரவிய இலங்கை, சீனா, பர்மா, இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், யப்பான் போன்ற நாடுகளிலும் பெண்தெய்வ வழிபாடு நடந்துள்ளமைக்கான குறிப்புக்கள் உண்டு. பர்மா, இந்தோனேசியா, மலாயா போன்ற நாடுகளில் சிவனோடு சேர்த்து உமாதேவியாரையும் வழிபட்டுள்ளனர். சிவனுக்கும் உமைக்கும் பெரும் பெருங் கோயில்களைக் கட்டி

வழிபட்டமைக்கான சான்றுகளாகப் பாழடைந்த பல கோயில்களை அந்நாடுகளில் இன்றும் நாம் காணலாம்.

அடுத்து மிகப் பழைய நூலான திருமந்திரம் பெண்தெய்வ வழிபாடு பற்றிக் கூறுவதை ஆராய்வோம். திருமந்திரம் தமிழ் வேதாகம முழுமுதற்கருவூல நூலாகும். இதனை முதல் நூலாகக் கொண்டு இதன் விளக்கமே ஏனைய பதினொருதிருமுறைகளும், பதின்நான்கு சித்தாந்த நூல்களும் என்று சைவசித்தாந்திகள் கூறுவர். திருமந்திரத்தில் ஒன்பது தந்திரங்கள் உள்ளன. அவை ஒன்பது ஆகமங்களின் சாராம்சம் என்றும் கூறப்படுகிறது. இத்தகைய பெருமை வாய்ந்த இந்நூல் சைவசமய உண்மைகளையும், உலகியல் ஒழுக்கங்களையும், திருக்கோயில் வழிபாடுகளையும், திருவுருவச் சிறப்புக்களையும், சக்கர அமைப்பு, மந்திர மாண்புகளையும், அடியார்களின் பெருமைகளையும், சிவகுருவின் முக்கியத்தையும், சிவபூசை நடைபெறும் விதங்கள் பற்றியும் மிகவும் விரிவாகக் கூறுகிறது. அத்துடன் சிவனின் பெருமைகளைக் கூறும் இந்நூல் சிவசக்தியாகிய உமாதேவியாரின் மாறுபட்ட தன்மைகள் பலவற்றையும் கூறுகிறது. சிவசக்தியான உமையம்மை எடுத்த பல்வேறு தோற்றங்களைப் பற்றியும், அத்தோற்றங்கள் எதற்காக எடுக்கப்பட்டனவென்றும் மிகவும் விரிவாகத் திருமந்திரம் கூறுகிறது.

திருமந்திரத்தில் உள்ள பல பாடல்கள், ‘கொன்றை மலரனிந்த சடையினையுடைய சிவபெருமான், அழகு விளங்குகின்ற ஒளி பொருந்திய நெற்றியை உடைய உமையம்மையாரைத் தனது இடப்பாகத்தில் வைத்திருக்கிறார்’ என்று கூறுகிறது.

“கோது குலாவிய கொன்றைக் குழற்சடை மாது குலாவிய வாள்நுதல் பாகனை”

“சிவமாம் பரத்தினிற் சக்தி சதாசிவம்”

“சீருடையாள் சிவனாவடுதண்டுறை”

“சக்தி சிவமாம் இரண்டும் தன்றுள்வைக்க”

“புவனம் படைப்பான் ஒருவன் ஒருத்தி”

“ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்றார்”

“அளியார் திரிபுரையாம் அவள் தானே, அளியார் சதாசிவமாகி அமைவாள்
அளியார் கருமங்கள் ஐந்தும் - செய்வாளே”

“ஓராயமே உலகேழல் படைப்பதும்
ஓராயமே உலகேழும் அளிப்பதும்
ஓராயமே உலகேழும் துடைப்பதும்
ஓராயமே உலகோடுயிர் தானே”

இப்பாடலின் பொருள், சிவனும், சிவையும் கூடும் கூட்டத்தாலேயே உலகம் தொழிற்படுகிறது; உடலோடு உயிர்கள் கூடிவாழ்கின்றன. சிவனும் சிவையும் ஒன்றே என்பதாகும்.

“ஆதி படைத்தனன் ஐம்பெரும் பூதம்” இப்பாடலில் “ஆதி” என்பது அம்மையுடன் கூடிய சிவபெருமான் என்று திருமூலர் கூறுகிறார்.

1736 ஆவது திருமந்திரப்பாடல் சதாசிவ வழிபாடு பற்றி இப்படிக் கூறுகிறது.

“வேண்டி நின்றே தொழு தேன் வினை போயற

ஆண்டொரு திங்களும் தாளும் அளக்கின்ற
தாண்டகை யானொடுங் கன்னி யுணரினும்
மூண்டகை மாறினும் ஒன்றதுலாமே''

இருள்சேர் இரு வினையும் நீக்கி அறக்கடவுளாகிய சதாசிவனது அருளை வேண்டித் தொழுதேன். ஆண் எனக்குறிப்பிடப்பட்ட கால வரையறை ஞாயிறு, திங்கள் என்ற விண்மீன்களைக் கொண்டு நிகழ்கிறது. ஞாயிறும், திங்களும் சதாசிவக்கடவுளின் இரு பெரும் திருக்கண்களாகும். அதனால் சதாசிவக்கடவுளே அளக்கிறார். சதாசிவக்கடவுளோடு பிரிவின்றிக் கலந்து நிற்கும் திருவருளாற்றல் ''மனோன்மணி'' எனப்படும். இவ் அன்னை அத்தன் என்னும் திருவுருவங்களில் எதனை வழிபட்டாலும் இருவரும் வேறுருவில் ஒருடம்பாய்த் திகழ்கின்றமையால் எல்லாம் சதாசிவ வழிபாடேயாகும்.

''எந்தை பரமனும் என்னமக் கூடமும் - 1740

''சக்தி சிவன்றன் விளையாட்டுத் தாரணி 1741

சிவனும் சக்தியும் மணியொளி போலப் பிரிவின்றிக் கலந்திருக்கின்றனர். உலகுடல்களாகிய மாயா காரியப் பொருட்கள் சிவன் சக்தியோடு பொருந்தச் சக்தியின் எண்ணத்தால் எளிதாகத் தோன்றிக் காரியப்படுகின்றன. இவ்வருட் செயலை விளையாட்டெனப்ர்.

இக்கருத்தைச் சிவஞானசித்தியார் 1 – 2 - 4 - 8, திருவெம்பாவை 125 ஆகியவையும் கூறுகின்றன.

''சிவமும் சக்தியும் அரனும் அரியும் அயனும் ஒன்றேயாகும். அவ்வொன்று சிவமாகும்''. 1776.

''சிவமொடு சக்தி திகழ்நாதம் வித்து,

தவமான ஐம்முகன் ஈசன் அரனும்,
பவமுறு மாலும் பதுமத்தோன் ஈறா,
நவமலையாகி நடிப்பவன் தானே".

"எங்கும் திருமேனி எங்குஞ் சிவசக்தி,
எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்,
எங்கும் சிவமாயிருத்தல், எங்கொங்குந்
தங்குஞ் சிவனருட்டன் விளையாட்டதே" 2674

சிவபெருமானின் திருமேனி சிவசக்தியே. சிவனின் அருளாற்றல் எங்கும் நிறைந்துள்ளது. சிவபெருமான் தான் செய்யும் திருவருட்தொழில்கள் அனைத்தையும் சிவசக்தியின் வாயிலாகவே செய்தருளுகிறார். சிவபெருமானும் சிவசக்தியும் திருச்சிற்றம்பலத்தில் வீற்றிருக்கின்றனர். அதனால் எங்கும் சிதம்பரம் என்றும், அவன் செய்தருளும் திருக்கூத்தும் எங்கும் நிறைந்துள்ளதென்றும் சொல்லலாம். எங்கும் சிவமயமாக இருப்பதால் எல்லா உயிர்களும், எல்லா உலகங்களும் எல்லாப் பொருட்களும் சிவனருளில் சார்ந்து நிற்கின்றன. 2674.

இக்கருத்தை சிவஞானபோதம் 2, 4, 1 சிவஞானசித்தியார் 2 பாடல்களும் கூறுகின்றன.

"தத்துவம் ஆடச் சதாசிவந் தானாடச்
சித்தமும் ஆடச் சிவசக்தி தானாட" 2743

"சிவபெருமான் தனித்து நின்று ஆடுவதில்லை. சிவனாடச் சக்தியும் ஆடும் என்கின்றது திருமந்திரம். இக்கருத்தைத் திருப்பொற்சுண்ணம் பத்தாவது பாடலும் கூறுகிறது.

"சிவமாடச் சக்தியுடாமச் சகத்தில்

அவமாட ஆடாத அம்பரமாட” என்றும்,

“தானாட சக்தியும் தற்பரை யாய்நிற்குந்

தானாம் பரற்கும் உயிர்க்குந் தகுமிச்சை” என்றும் திருமந்திரம் கூறுகிறது.

சிவம் வேறு சக்தி வேறல்ல. சிவமும் சக்தியும் மரமும் காழ்ப்பும் போன்றன. காழ்ப்பு என்பது வைரம். இச்சக்தி வனப்பாற்றலாகிய பராசக்தியாய் நிற்கும். அத்துடன் அச்சக்தியானது தானாய் விளங்கும் சிவனுக்கும் தன்னை நாடும் ஆருயிர்களுக்கும் தொழில் அறிவுகளுக்கு வழியாக நிற்கும் விழைவாகிய இச்சையாக நிற்கும். ஆருயிர்களிடையே உண்டாகும் அறிவு, அறியாமை முதலிய வேறுபாடுகளை உணர்த்தி நடக்கும். நடப்பாற்றலாகவும் நிற்கும் திருவருட்கூத்தையும் திறம்பெற நடத்தும். தன்னை அன்புடன் பூசிக்கும் ஆருயிர்களின் அன்புப் பொருளாகவும் நிற்கும்.

“சிவன் தான் மூலனாக அவதரித்து ஒரு வருடத்திற்கு ஒரு மந்திரப்பாட்டாகப்பாடி மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து மூவாயிரம் திருமந்திரப் பாடல்களைப் பாடியதாகச் சைவசித்தாந்திகள் கூறுவர். இதை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் திருமந்திரப் பாடல்கள் கூறுவதைப் போல வேறெந்த நூலும் சைவசித்தாந்தத்தைப் பற்றிச் சிறப்பாகக் கூறவில்லை.

“நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்

நந்தி அருளாலே சதாசிவனாயினேன்

நந்தி அருளால் மெய்ஞ்ஞானத்துள் நண்ணினேன்

நந்தி அருளாலே நானிருந் தேனே”

என்ற பாடலில் வரும் “மூலன்” என்பது சிவபெருமான் என்பாருமுளர்.

இதுவரை சிவனும் சக்தியும் ஒருவராக இருப்பதாகத் திருமந்திரப் பாடல்கள் கூறியதைப் பார்த்தோம். இனிச் சிவசக்தி தான் உலகை இயக்குகிறது என்றும், அச்சக்தி தான் பல்வேறு வகைப்பட்ட பெண் தெய்வங்களாக மாறி மக்களுக்கருள் செய்ததென்று திருமூலர் கூறுவதைப் பார்ப்போம்.

320 ஆவது திருமந்திரப்பாடல் இவ்வாறு சொல்கிறது.

“சத்தன் அருள்தரிற்சக்தி அருளுண்டாஞ்
சக்தி அருள் தரிற் சத்தன அருளுண்டாஞ்
சக்தி சிவமாம் இரண்டுந் தன்னுள் வைக்கச்
சக்தியம் எண் சித்தித்தன்மையு மாமே”

சக்தனை அத்தன் என்றும் சக்தியை அன்னையென்றும் அழைப்பர். அத்தன் அன்னையைத் தன்னுள் பேரொடுக்கப் பேரூழியில் ஒடுக்கிக் கொள்வன். பின்பு உலகைத் தோற்றமம் மார்கழித்திருவாதிரையின் போது அன்னை வெளிப்படுத்தப்படுவாள். இவ் ஆதிசக்தி உயிர்களின் அறிவை விளக்கும் போது ஞானம் எனவும், அன்பை விளக்கும் போது இச்சை எனவும், ஆற்றலை விளக்கும் போது கிரியை எனவும் சொல்லப்படும். இந்த வகையில் திருவருளை பேரறிவுப் பெருந்திரு, பேராற்றற் பெருந்திரு, அறிவுப் பொருந்திரு, அன்புப் பெருந்திரு, ஆற்றற் பெருந்திரு என ஐவகையாகச் சொல்லப்படும். இவற்றை முறையே பராசக்தி, ஆதிசக்தி, இச்சா சக்தி, ஞானாசக்தி, கிரியா சக்தி என்பர்.

இக்கருத்தை “சிவஞ்சக்தி” என்று சிவஞானசித்தியாரின் 2-4-5 பாடல்களும், திருப்பொற்சுண்ணம் 13ஆவது பாடலும், திருக்கோவையார் 112 ஆவது பாடலும் கூறுகின்றன.

சாக்தசமயம் சக்தி வழிபாட்டிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. சக்கரத்துள்த்தான் பெண் தெய்வங்கள் இருந்து அருளுவதாக அவர்கள் நம்புகின்றனர். த்ரைலோக்ய மோஹன சக்கரதேவிகள் எட்டுப்பேர். த்ராலோக்யமோஹன சக்கர தேவிகள் பத்துப்பேர். ஸர்வாசா பரிபூரக சக்கர தேவிகள் பதினாறு பேர். ஸர்வஸம் ோபணசக்கர சக்திகள் பதின்னான்கு பேர். ஸர்வார்த்த ஸாதக சக்கர தேவிகள் எட்டுப்பேர். இவ்வாறு பெண் தெய்வங்களைச் சக்கரங்களில் அமர்த்திப் பூசிப்பது சாக்கியரது மரபு. இவற்றைவிட ஸர்வஸித்திப்ரத சக்கரத்தில் முக்கோணத்தில் ப்ரஹ்மாதமசக்தியாய் வாக்பீஜா ஸ்வரூபிணியாய் காமகிரிபீடத்தில் மஹாசரஸ்வதிதேவி இருக்கிறாள். இதைத் திருமூலர் 388ஆவது பாடலில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

“அளியார் முக்கோணம் வயிந்தவந் தன்னில்
அளியார் திரிபுரையாம் அவள் தானே
அளியார் சதாசிவமாகி அமைவாள்
அளியார் கருமங்கள் ஐந்து செய்வாளே”

தூமாயையின் கண் திருவருள் நிலைக்களமாம் முக்கோணம் தோன்றும். அதன்கண் வீற்றிருப்பவள் திரிபுரை. அவள் சதாசிவத்திற்கு உடலாக அமைந்தவள். அவள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலையும் புரிபவள். அவ் ஐந்தொழிலும் அருளாற் புரியப்படுவனவே.

389 ஆவது பாடல் இவ்வாறு கூறுகிறது. திருவருளானது அருளோன் நிலையில் மனோன்மணி என்றும் சிவனாகி நிற்கும் நிலையில் மங்கலி என்றும் அழைக்கப்படும். படைத்தலைச் செய்பவள் வாரணி, காத்தலைப் புரிபவள் ஆரணி, அழித்தலைப் புரிபவள் காளி, மறைத்தலைப் புரிபவள் ஆதிபூரணி இவ்வாறு எல்லாமாகி நிற்பவள் திருவருளம்மை.

1021ஆம் பாடலிலிருந்து 1050 ஆவது பாடல்வரை "சக்தி பேதம் திரிபுரைச் சக்கரம்" பற்றிச் சொல்கிறது.

காரிய உலகு உடல்பொருள்களுக்குக் காரணமாகிய மாமாயையும், அக்காரிய மாயையும், ஒளியாகிய வைந்தவமும், செவி ஓசையும், ஓமொழியும், அதன் உள்ஒளியாகிய எழுத்துக்களும் செருக்கு, சினம், சிறுமை, இவறல், மாண்பிழந்த மானம், மாணாவுலகை என்னும் அறுவகைக்கு உடனாகும். ஆறு கோடி மாயையின் ஆற்றல்களும் தாமே இயங்கும் தன்மை வல்ல மந்திர உருவாகிய திருவருளாற்றல் இவற்றை இயைந்து இயக்குகின்றது. அதனால் அவை இயக்க இயங்கும் பொருளாகும். அவ்வாற்றலே திரிபுரை என்று வழங்கப்படுகிறது.

மூன்று பிரிவுகளாக உள்ள வட்டத்திற்குரியவள் திரிபுரை. நீண்ட அழகிய கரிய மேகம் போன்ற அம்மை திருவடியின் கண் சிலம்பணிந்தவள். செந்நிறப் புடைவை அணிந்தவள். நான்கு கரத்திலும் முறையே கரும்பும், வில்லும், பூவாளியும், அழகிய தோட்டியும், கயிறும் உடையவள். காதில் குண்டலம் அணிந்தவள். "சண்டிகை" என்ற திருநாமத்தைக் கொண்டவள். யானையின் மேற்செல்பவள். நெருங்கிய பல இதழ்களையுடைய தூய தாமரையின் மேல் வீற்றிருப்பவள். மாயையைத் தொழிற்படுத்துபவள். உமையவள், ஆற்றவள்,

பெரும் பொருட்செல்வி முதலிய சிறப்புப் பெயர்களையுடையவள்.

திரிபுரையை அறியாத தேவர்கள் எவருமில்லை. அவளுடைய அருளில்லாமல் ஐந்தொழில்களையும் செய்ய முடியாது. சிவனும் அவளிடமாகக் கொண்டு திகழ்பவன்.

இவள் திருமாலின் தங்கை. படைப்புத் தொழிலுக்கு உதவுபவள். ‘‘நமசிவாய’’ என்ற மந்திரத்தை எட்டிதழ்த் தாமரையில் வரைந்து அதன் மத்தியில் இருப்பவள். இயற்கை உழுபடை போன்ற வெண்பன்றி முகத்தினள். புன்நெறியாளர்களை இடித்து ஒடுக்குவதற்காக இரும்பு உலக்கையைக் கையில் ஏந்தியவள்.

ஓமொழிக்கு உரியவளாகிய ஒப்பில்லாத பெண்பிள்ளை; மரகதப் பச்சை நிறத்தினள். அருளோன், ஆண்டான், அரன், அரி, அயன் ஆகிய ஐவரையும் படைத்து அந்த ஐவரையும் தொழிற்படுத்துபவள். உலகங்கள் பதின்னான்கையும் இயக்குபவள்.

இப்படித் திருவருளம்மையைப் பற்றி திரிபுரைச் சக்கரத்தில் திருமூலர் கூறுகிறார். இக்கூற்றுக்களைப் பார்க்கும் போது திரிபுரையே உலகங்களையும், உயிர்களையும், அருளோன், ஆண்டான், அரன், அரி, அயன் என்ற ஐவரையும் படைத்து உலகை ஆள்கிறாள் என்பது புரிகிறது.

அடுத்து வயிரவி மந்திரம் என்ற பகுதியில் (1051 – 1100) அம்மையின் இருப்பு, செயல்கள் பற்றிக் கூறுகிறார்.

பன்னிரண்டு கலை வடிவான ஆதி வயிரவி அம்மை அகரமாகிய ஓசையையும், மாயையாகிய ஒளியையும் சேர்த்துப்

பதின்னான்கு கலைகளைத் தன்னுள் அடக்கியவள். அதைப் பின்வருமாறு திருமூலர் கூறுகிறார்.

“அந்தம் பதினாறும் அதுவே வயிரவி
முந்துநடுவும் முடிவும் முதலாகச்
சிந்தைக் கமலத் தொழுகின்ற மாசக்தி
அந்தமும் ஆதியு மாகிநின் றாளே”

பல மணிகளை அணிந்த திருவடிகளையுடையவள். குண்டலம் அணிந்த காதுகளை உயடையவள், ஞாயிறு, திங்கள், தீ என்ற மூன்றையும் கண்களாக உடையவள். எட்டிதழ்த் தாமரையில் உறையும் எண்மரில் தோன்றும் கலை முதல்வியா் அறுபத்து நால்வரும் அம்மையின் தோற்றமே. சிலம்பும், வலம்புரிச் சங்கும், சக்கரமும் உடையவள். பல்வேறு அண்டங்களையும், பல்வேறு திசைகளையும் படைத்துக் காப்பவள். ஐந்தெழுத்து மந்திரத்தின் வடிவானவள்; ஐவகை ஒலி வடிவினள். பொன்னில் பலவகை ஆபரணங்கள் செய்தாலும் பொன் ஒன்றே. அது போலத் தெய்வங்கள் ஆயிரமிருந்தாலும் அவை அம்மையே.

நிலைபெற்று நின்றருளும் வயிரவி நீலநிறமுடையவளாக இருப்பதால் அவளை ‘நீலி’ என்பர். ஆணைசோ் தெய்வங்கள் அனைத்தையும் அவள் படைத்த போதும் கன்னித் தன்மையுடன் இருப்பவள். வேதங்களையும் ஆகமங்களையும் அருளியவள். அருளாற்றல் மிக்க மாயையைத் தொழிற்படுத்தும் போது அம்மை இருள்நிறமாகிறாள். அதற்கு சிவன் ஒளி கொடுப்பார்.

அழகிய நெற்றிக் கண்ணையுடைய சிவன் உயர்ந்தவன்; ஆருயிர்களின் முதல்வன்; அனைத்து உலகங்களினதும் தலைவன். இவை யாவும் உமையம்மையின் திருத்தோளைப்

புணர்ந்தமையால் வந்தவை என்று திருமூலர்; "உகந்து நின்றான் அவள் தன்றோள் தொகுத்தே" என்ற அடிமூலம் கூறுகிறார்.

சிவனின் கூறாகத் திகழும் அம்மை பத்துத் திருமுகங்களை உடையவள். அவள் பேரருள் என்னும் பெயருடைய பராசக்தியானவள். ஆருயிர்களை இயக்கும் மோகினி அவளே; காளியும் அவளே. இதைத் திருமூலர் பின்வருமாறு சொல்கிறார்.

"காணும் பொருளும் கருதிய தெய்வமும்
பேணும் பதியும் பெருகிய தீத்தமும்
ஊணும் உணர்வும் உறக்கமுந் தானாகக்
காணுங் கானகமுங் காரிகை யாமே".

எல்லாவற்றையும் திருவுள்ளத்தால் படைத்தருளும் சதாசிவநாயகி, துவா மாயையிற் காணப்படும் ஊழி. ஊழ் உழைப்பு, உணர்வு, உள்ளன்பு உழைப்பி, உறழ்வு என்னும் ஏழு மெய்கட்கும் அறிவாக இருப்பவள். நிலம், நீர், நெருப்பு, உயிர், நீள்விசும்பாக விரிந்து நிற்பவள். பொன்னாலான தகட்டில் வரைந்த சக்கரத்தின் கண் அமர்ந்திருப்பவள்.

1378 ஆவது பாடலில் உமையம்மைக்குப் பத்துக் கைகள் என்றும், அப்பத்துக் கைகளிலும் முறையே பளிங்குமாலை, முத்தலைவேல், மண்டையோடு, பசுங்கிளி, பலமணிகளையுடைய பாம்பு, மழுப்படை, கத்தி, பூம்பந்து, செந்தாமரை, உடுக்கு என்பன உள்ளனவென்றும் திருமூலர் கூறுகிறார்.

சிவபெருமானுக்குத் திருமேனி சிவசக்தியேயாகும். சிவசக்தி மூலமாகவே சிவபெருமான் திருவருட்

செயல்களனைத்தையும் செய்தருளுகின்றான். திருவருளின் ஆற்றல் ஐந்தாகும். இவ் ஐந்தும் முறையே பராசக்தி, ஆதிசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி, இச்சாசக்தி எனப்படும்.

இவ்வாறு திருமூலர் திருமந்திரத்திற் கூறுகிறார். சிவசக்தியாகிய உமையம்மையின் சக்தியால் தான் அண்டங்கள் யாவும் தோன்றி விரிவடைந்து இயங்குகின்றன. சிவசக்தியே பல்வேறு வடிவங்களைத் தாங்கி பல்வேறு பெண் தெய்வங்களாகக் காட்சி கொடுக்கிறாள். பெண் தெய்வங்கள் அனைத்திற்கும் இந்து மதங்கள் கூறும் இலக்கணங்கள் யாவும் திருவருளம்மையில் இருப்பதாகத் திருமூலர் கூறுகிறார். சதாசிவ நாயகியான திருவருளம்மையைப் பற்றி முன்னூறுக்கு மேற்பட்ட பாடல்கள் திருமந்திரத்தில் உண்டு.

அபிதான சிந்தாமணி என்ற நூல் சக்தியின் பெருமைகளைப் பற்றி மற்றய நூல்களை விடச் சிறப்பாகக் கூறுகிறது. எனினும் அதில் கூறப்பட்ட செய்திகள் யாவும் திருமந்திரத்தில் உள்ளன. இரண்டும் கூறும் செய்திகள் ஒன்றான போதும் சில மாறியும் உள்ளன. சிவசக்தி சிவத்தோடு பிரிவின்றி இரண்டறக்கலந்திருப்பதால் ‘‘பராசக்தி’’ என்று சொல்லப்படுகிறாள். இவளே இச்சாசக்தி, கிரியா சக்தி என்றும் அழைக்கப்படுகிறாள்.

குமரக்கடவுளின் தோற்றத்தைத் தடுப்பதற்குத் தேவர்கள் முயன்றனர். அதனால் உமாதேவியாரின் கால் மணிகளிலிலிருந்து ஒன்பது மணிகள் சிதறி ஒன்பது பெண்களாயின. அவ் ஒன்பது பெண்களும் சிவனருளாற் கர்ப்பமாகினர். அதைக்கண்ட சக்தியானவள் அவர்கள் கர்ப்பந்தரிக்காதிருக்கச் சாபமிட்டாள். அதனால் அப்பெண்கள்

கோபப்பட்டு இலட்சம் வீரரை உருவாக்கினர். பின் உமையம்மையார் கோபம் நீங்கிச் சாந்தமடைந்து அந்த ஒன்பது கன்னியர்களுக்கும் வரமளித்து மகிழ்வித்தார். முருகக்கடவுளைத் தோன்றாதிருக்கச் செய்த தேவர்களைத் தன்டித்து அவர்களுக்குப் புத்திர பாக்கியம் இல்லாதிருக்கச் சாபமிட்டாள்.

சிவசக்தியான அம்பிகையின் பத்துக் கரங்களிலும் பத்து ஆயுதங்கள் உள்ளன. அவற்றால் துட்டர்களை அவள் அழித்து வந்தாள். ஒரு சமயம் அம்பிகை தனது தோழியர்களுடன் பூம்பந்து விளையாடும் போது அந்தப்பக்கமாக வந்த விருளன், உற்பவன் என்ற அரக்கர்கள் அம்பிகையுடனும் தோழியர்களுடனும் சரசம் செய்ய அம்பிகை பூப்பந்தால் எறிந்து அவர்கள் இருவரையும் கொன்றாள். அப்பூப்பந்து அம்பிகையின் கையைவிட்டுச் சென்றதும் சிவலிங்கமாக மாறிச் செயற்பட்டது. அச்சிவலிங்கம் பின் கந்து கேசம் என்ற பெயரில் காசியில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

துராசகன் என்னும் அரக்கனைக் கொல்வதற்காக 'வக்கிரதுண்டர்' என்ற விநாயகரைப் படைத்தவள்.

காளியாக உருவெடுத்து சண்டசாமுண்டன், இரத்த பீனன் என்ற அசுரரை மழுவாற் கொன்றவள்.

துர்க்கையாக அவதாரமெடுத்து துர்க்கன் என்ற அசுரனை அழித்தவள்.

பிருங்கி முனிவரின் செருக்கை அடக்கியவள். பண்டாசுரனுக்கு வரமளித்து பின் அவனது கொடுமைகளைத் தாங்க முடியாது தேவர்கள் அல்லற்பட அவனைக் கொன்றவள்.

புலி முகன், மகுடன் என்ற அசுரர்கள் கொடுமை செய்த போது வெகுண்டெழுந்து அழித்துத் தேவர்களையும் மக்களையும் காத்தவள்.

சிவபெருமான் தனது சக்தியை ஒடுக்கத் தவஞ்செய்த போது உலகம் ஒடுங்கியது. முனிவர்களின் வேண்டுகோளுக்கிணங்கச் சிவன் தனது சக்தியை விரிவுபடுத்தினார். இதனால் பாதிக்கப்பட்ட சக்தி வல்லவையாகத் திருஅவதாரம் செய்தாள்.

விக்கிரகமாசுரனின் தலையை அறுத்துத் தனது ஆசனமாக்கினாள். அடித்தவனைச் சபிக்க அக்கணம் சிங்கம் தோன்றியது. அதில் ஏறி அம்பிகை அமர்ந்து கொண்டாள். மூகாசுரனையும் அவனுடன் சேர்த்து அசுரர்களையும் அழித்தவள்.

இவள் பஞ்சபூதங்களில் ஈசானி, பூரணி, வாமை, சேஷ்டை, ரவுத்திரி ஆக இருப்பவள்.

கங்கை நதியைப் பூமியில் பாயச் செய்தவள்.

நந்தன் என்ற இடையனின் மனையில் மயாதேவியாக அவதரித்தவள்.

ரத்ததந்தி என்ற நாமத்துடன் அவதரித்து விப்ர சித்திரியின் குமாரர்களை அழித்தவள்.

சண்டிகையாக அவதாரமெடுத்து சண்டன் என்ற அசுரனை அழித்தவள்.

மழையில்லாமையால் முனிவர்கள் தவஞ்செய்ய முடியாமையைக் கண்டு ‘சதாஷி’ என்ற நாமம் பூண்டு கருமுகிலாகிப் பெருமழை பெய்தவள். பீமை என்ற அவதாரமெடுத்து அக்கிரமங்கள் பலவற்றைச் செய்த “தண்டி”

என்ற அசுரனை அழித்தவள். காளி உருக்கொண்டு சண்டமுண்டர்களைக் கொண்றவள். அதனால் ‘‘சாமுண்டை’’ என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவள். அதே காளியுருக்கொண்டு ரத்தபீஜனையும், கம்பனையும் கொன்றவள். இவள் ஊழிக்காலத்தில் ஐந்து சக்திகளையும் அடக்கிப் பிரேதமாக்கி அதில் அமர்ந்திருப்பதால் ‘பஞ்சப்பிரேத பராசக்தி’ என்று அழைக்கப்பட்டவள். நாராயணனின் சாயலும், அவனது பண்புகளும் இவளிடம் இருப்பதால் ‘நாராயணி’ என்று சொல்லப்படுபவள். திருமந்திரம் ஐந்தொழில்களைச் செய்யும் ஐவரும் இவளே என்று கூறுகிறது.

சர்வசித்திகளும் இவளிடமே அடங்கியுள்ளது. இதனால் இவளை ‘‘ஈசானி’’ என்றும், அநந்த கல்யாணரூபமுடையவள் என்பதால் ‘சிவை’ என்றும், சற்புத்தி அதிஷ்டான தேவதையாக அவள் இருப்பதால் ‘சதி’ என்றும், நித்தியமானவளாக என்றும் சிவனுடன் இருப்பதால் ‘‘பகவதி’ என்றும், அழிக்க முடியாதவள் என்பதால் ‘நித்யை’ என்றும் தனித்திருக்கும் போது ‘சத்யை் என்றும், அண்டசராசரங்களைத் தோற்றுவித்து அதைக்காப்பதால் ‘சர்வாணி’ என்றும், ஆன்மாக்களுக்கு சகல சௌபாக்கியங்களையும் வழங்குவதால் ‘சர்வ மங்கலை’ என்றும் ஆன்மாக்களுக்குத் தாயைப் போல உதவுவதால் ‘அம்பை’ என்றும், விஷ்ணுவைப் போல இருப்பதால் ‘வைஷ்ணவி’ என்றும் பொன்நிறத்தையும் சிவனின் அரைப் பாகத்தையும் கொண்டிருப்பதால் ‘கௌரி’ என்றும், பார்வதனின் புத்திரி என்பதாலும், பாருக்கெல்லாம் அதிபதியாக

இருப்பதாலும், பரமசிவனின் சக்தியாக இருப்பதாலும் "பார்வதி" என்றும், சிவனின் திருவருளன்னையாக இருப்பதால் 'சக்தி' என்றும், சர்வ உலகங்களுக்கும் தலைவியாக இருப்பதால் 'சனாதனி' என்றும் பல நாமங்களைக் கொண்டுள்ளவள்.

இதைவிட 'சசினி, அங்கதை, இஷ்டை, சுவாலினி, அவ்யக்தை, மரீசி, பிரதிஷ்டை, நிவர்த்தி, சாந்தை, வித்யை, தமசு, மோகை, சாயை, நிஷ்டை, மிருத்யு, பயை, மாயை, ஜரை, ஜரசு, ரஷை, ரத்யை, பால்யை, சம்யம்ன்யை, காம்பை, க்ரியை, கார்பை, புத்யை, தாத்ரி, ப்ராமான்யை, மோகினி, பவை, வருத்தி, சித்தி, லஷ்மி, மேதா, காந்தி, தாத்ரி, த்வித்தை, ஸ்வதை, த்ருத்யை என்ற நாமங்களை உடையவள்.

இவற்றைவிடப் பிரதிவி உருவம் பெற்றவேளை 'வாமை' எனவும், ஜலரூபம் எடுத்த வேளை 'சேஷ்டை', எனவும் அக்கினி ரூபம் எடுத்த வேளை 'ரௌத்ரி' எனவும், வாயு ரூபத்தில் இருக்கும் போது 'காளி' எனவும், சந்திரரூபமெடுத்த போது 'கலவிகரினி' எனவும், சூரியரூபமாக இருக்கும் போது 'பாலப்பிரமதனி' எனவும், ஆன்மரூபத்தில் இருக்கும் போது 'சர்வபூத்தமனி' எனவும், சிவரூபமாக இருக்கும் போது 'மனோன்மணி' எனவும் அழைக்கப்படுபவள்.

இவற்றைவிட தாட்ஷாயினி, பார்வதி, தடாதகை, அமோகை, தண்டினி, என்ற நாமங்களையும் உடையவள்.

இந்து சமயங்களெனக் கூறப்படும் ஆறு சமய வழிபாடுகளையும் எடுத்துக் கொண்டால் சமயங்களின் பெயர்களும் வணங்கப்படும் கடவுள்களின் பெயர்களும்

வேறாக இருந்த போதும் வணங்கும் முறைகளும் அவை கூறும் சமய தத்துவங்களும் ஒன்றென்றே கூறலாம். ஆறு மதங்களின் கடவுள்களும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கின்றனர். சிவனும் சக்தியும் கணவனும் மனைவியுமாவர். முருகனும் பிள்ளையாரும் சிவனதும் சக்தியினதும் பிள்ளைகள். விஸ்ணு சக்தியின் சகோதரன். சூரியனைச் சிவனே படைத்தார். என்று சைவசமயம் கூறுகிறது. எனவே சமயங்களையோ, சமய தத்துவங்களையோ நாம் பிரித்து நோக்க முடியாது. பகவத்கீதையில் வீபூதி யோகத்தில் பகவான் மஹா விஷ்ணு தானே உலகையும், அனைத்து உயிர்களையும், தத்துவங்களையும் படைத்ததாகவும், முருகனாகவும், சிவபெருமானாகவும், சூரிய சந்திரர்களாகவும் உலகில் உள்ள சிறந்த பொருட்களாகவும் தானே தோற்றமளிப்பதாகவும் கூறுகிறார். இதில் சக்தியும் தான் தான் என்கிறார். விநாயகர் தான் அனைத்தையும் படைத்ததாக விநாயகர் புராணம் கூறுகிறது. இவற்றையெல்லாம் கருத்திற்கொள்ளாது நாம் பெண் தெய்வவரலாறு பற்றி ஆராய்வோம். சைவ சித்தாந்தம் சிவனையும் சக்தியையும் பிரித்துப் பாராது ஒன்றாகவே காண்கிறது. என்று மனிதன் கடவுளை வணங்கத்தொடங்கினானோ அன்றே தாய்த் தெய்வ வழிபாடும் ஆரம்பமானது.

பகவத்கீதையில் மஹாவிஷ்ணு தான் குண்டலினி சக்தியாக உடலில் இருந்து செயற்படுவதால் தான் உணவு சீரணமாகிறது என்று சொல்கிறார். சாக்த மதத்தினர் பராசக்தியின் வடிவமாக அம்பிகை உயிர்களது சரீரத்தில் வீற்றிருக்கும் நிலையைக் குண்டலினி சக்தி என்கின்றனர். குண்டலினி சக்தி உயிர்களது சரீர சம்பந்தமான சகல

காரியங்களுக்கும் காரணமாக இருக்கிறாள். இதனால் சக்தி ‘மஹாகுண்டலினி’ எனப் போற்றப்படுகிறாள்.

குண்டலினி சக்தி மானிட உடலுள் ஒரு பாம்பாக வீற்றிருப்பதாகச் சாக்த மதத்தினர் நம்புகின்றனர். இதை அவர்கள் ‘வாழும்பாம்பு’ என்று சொல்கின்றனர். இப்பாம்பு சாதாரண மனிதர்களின் கண்களுக்குப் புலப்படாது என்றும், அது உபாசகர்களின் கண்களுக்குப் புலப்படும் என்றும் சாக்த மதத்தினர் நம்புகின்றனர். அத்துடன் குண்டலினி சக்தியால் தான் உடல் இயங்குகிறது என்றும் அவர்கள் நம்புகின்றனர்.

தாய்த் தெய்வமான சக்தியைப் பூசிப்போர் ஸ்ரீசக்கரத்தில் சக்தியை அமர்த்தி அச்சக்கரத்தையே பூசிப்பர். சக்கரத்தில் உறைந்திருக்கும் அம்பிகை தன்னைப் பூசிப்பவர்களுக்குச் சகல போகங்களையும் அளிப்பாள். இச் சக்கர வழிபாடு பற்றியும், அதில் சதாசிவ நாயகியான திருவருளம்மை உறைந்திருந்து சகல போகங்களையும் அளிப்பதாகத் திருமந்திரம் கூறுகிறது. சாக்த மதத்தினர் கூறும் சக்கரங்களின் பெயர் வரிசைப்படி திருமந்திரம் கூறாவிட்டாலும் அம்மை பல்வேறு சக்கரங்களில் உறைந்திருப்பதாகக் கூறுகிறது.

சக்தியின் ரூபவிருத்தி பற்றித் திருமந்திரம் இவ்வாறு கூறுகிறது. ‘திருவருளின் ஆற்றல் ஐந்தாகும். இவ்வைந்தும் முறையே பராசக்தி, ஆதிசக்தி, ஞானாசக்தி, கிரியாசக்தி, இச்சாசக்தி எனப்படும். சாக்த மதம் உலகைச் சிருஷ்டிப்பதில் ஐந்து சக்திகள் பயன்படுகின்றன என்று கூறுகிறது. அவ் ஐந்தும் முறையே துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி, சாவித்திரி, ராதா என்றும் கூறுகின்றது.

உலகில் உள்ள எல்லாப் பொருட்களிலும் நிறைந்திருப்பவளும், கணேசரின் அன்னையுமான துர்க்கையைப் பிரார்த்திப்பவர்களுக்குத் துர்க்கை வேண்டுவன யாவற்றையும் அளிப்பாள். புகழ், தனம், சுகம், மோட்சம், மங்களம் அனைத்தையும் வழங்குவாள். தன்னை வணங்குவோருக்கு வரும் தீமைகளை ஒழிப்பாள். சகல சக்தியும் அளிப்பவள். பலவீனர்களைப் பலசாலியாக்குபவள். கோளைகளை மாவீரர் களாக்குபவள் என்று சாக்தமதம் கூறுகிறது. இவள் விஷ்ணுவுக்கு மாயையாகவும், சிவனுக்கு திருவருளம்மை என்ற நாயகியாகவும் விளங்குபவள். பண்டைக் காலத்திலிருந்து அரசர்களும் வீரர்களும் தமக்கு வீரம்வர வேண்டுமென்று எண்ணித் துர்க்கைக்கு பூசைகள் சடங்குகள் செய்து வணங்கியதாகப் பண்டைய நூல்கள் கூறுகின்றன. இவ்வணக்கம் இன்றும் வீடுகளிலும் பாடசாலைகளிலும் கோயில்களிலும் நடைபெறுகிறது.

சுத்ததத்துவத்தின் வடிவாகத் திகழும் லட்சுமிதேவி சகல செல்வங்களையும் சௌபாக்கியங்களையும் அள்ளி வழங்குபவளாக இருக்கிறாள். இவள் அமைதி, ஒளி, அழகு, சாந்தம் முதலியவற்றின் வடிவமாக வணங்கப்படுகிறாள். இவள் மஹாவிஷ்ணுவின் நாயகியாக இருப்பவள். பாற்கடலில் மஹா விஷ்ணுவுடன் ஐந்து தலைநாகத்தில் பள்ளி கொண்டிருப்பவள். இவளை வணங்குவோர். சகல செல்வங்களையும் பெற்று இன்பமுடன் வாழ்வர். இவளை அரசர்கள் ராஜ்ஜியலஷ்மியாகவும், ராஜலஷ்சுமியாகவும், இல்லறவாசிகள் கிருகலஷ்மியாகவும், புண்ணியவான்கள் ப்திதி லஷ்மியாகவும், சத்திரியர்கள் கீர்த்தி லஷ்மியாகவும், வைசிகர் வர்த்தக லஷ்மியாகவும், பாவிகள் கலல்‘மியாகவும், வேதாந்திகளுக்கு

தயாளஷ்மியாகவும் கொண்டு வணங்குவதாகச் சாத்தசமயம் கூறுகிறது. இவள் தன்னைப் பூசிப்பவர்களின் காமம், லோபம், மோகம், மதம், அகங்காரம் முதலியவற்றை அழித்து ஆத்மஈடேற்றத்தை அளிப்பவள். பண்டைக் காலத்திலிருந்து கோயில்களிலும், அரண்மனைகளிலும் வீடுகளிலும் பாடசாலைகளிலும் இவள் வணங்கப்பட்டு வருகிறாள். அந்த வழிபாடு இன்றும் தொடர்கிறது.

வாக்கு, புத்தி, வித்தை, ஞானம் என்பவற்றை ஆன்மாக்களுக்கு அள்ளிக் கொடுக்கும் வள்ளல் தன்மை உள்ளவளாக நினைத்துச் சரஸ்வதியைப் போற்றிப் புகழ்ந்து மக்கள் வணங்குகின்றனர். கலைகள் அறுபத்து நான்கையும் தன்னகத்தே கொண்டவள். கவிஞர்கள், எழுத்தாளர்கள், மக்கள் குறிப்பாக மாணவர்கள் தமக்குப் புலமையையும், ஒப்புயர்வில்லாத கல்விச் செல்வத்தையும் தரும்படி கோரி வணங்குவர். இவளின் அருளைப் பெற்றவர்களே உலகம் போற்றும் கவிஞர்களாவர். இவள் தன்னை வணங்குவோரின் நாவில் இருப்பவள். கவிஞர்கள் பாடும் கவிதையில் கருவுருவாக இருப்பவள்; கவிஞர்களின் சிந்தையில் சித்தாந்த பேதங்களின் வடிவமாக இருப்பவள். அத்துடன் எல்லாவிதமான உட்பொருளாகவும், கவிதைகளின் தாளபேத காரண வடிவாகவும் இருக்கிறாள். இதனால் நாதத்தின் பிரபஞ்ச வடிவமாகவும், இவள் இருக்கிறாள். சரஸ்வதிதேவியின் வழிபாடு பண்டைக்காலம் தொடக்கம் இன்று வரை சகல மக்களாலும் கைக் கொள்ளப்படுகிறது.

பஞ்சப் பிரான்களின் வடிவமாகவும், அவற்றின் ஆதிதேவியாகவும் விளங்குபவள் ராதாதேவி. உலகின் சம்பதாகவும், உலகிலுள்ள அழகிய பொருட்கள் யாவற்றையும்

விட உயர்ந்த அழகுருவாகவும் திகழ்பவள். எல்லா உடல்களிலும் இடப்பாகத்தில் இருப்பவள். உலகின் ஆதிமூலமாக இருப்பவள். இவள் பூசைக்கு உகந்தவளாகையால் இவளை எல்லோரும் விரும்பி வணங்குவர். இவள் பரமாத்மாவின் ராஸக்கீரிடை மண்டபத்தில் இருப்பவள். ஆதனால் இவள் அலங்காரமானவளாகவும், ராஸக்கீரிடைக்கு இறைவியாகவும் இருக்கிறாள். இவள் ராஜமாளிகையிலும் கோகுலத்திலும் வசிப்பவள். கோபிகா ஸ்திரியின் வேடம் பூண்டவள். தேவர்களும், முனிவர்களும் ஞானத்தால் இவளை அடைகின்றனர். நெருப்பாலான ஆடையை அணிந்துகொண்டு பலவித அலங்காரங்களுடனும் அணிகலங்களுடனும் எவ்வேளையிலும் வீற்றிருந்து அருள்பாலிப்பவள். இவளது உடல் கோடிக்கணக்கான சந்திரர்கள் தோன்றி ஒளி வீசுவதைப் போலப் பிரகாசமாக இருக்கும். கிருஷ்ணபரமாத்மாவின் பத்தையான இவள் பூமாதேவியைத் தாங்குபவளாகவும், தூய்மைப்படுத்துபவளாகவும் இருக்கிறாள். இவள் பரமாத்மாவின் மார்பில் பெண்ரத்தினமாக இருக்கிறாள். பிரம்மா ஆத்மசொரூப நிலையை அடைவதற்காக அறுபதினாயிரம் ஆண்டுகள் கடுந்தவம் செய்த போதும் கூட இவளது திருவடிகளைக் காணவில்லை. பின் பிரம்மா பூவுலகம் வந்து கடுந்தவஞ் செய்து இவளைக் கண்டதாகப் புராணங்கள் கூறுகின்றன.

இவற்றை விடச் சக்தியின் அம்ச ரூபங்களாகக் கங்காதேவியும், துளசிதேவியும், மானாஸாதேவியும், சஷ்டிதேவியும், மங்கள சண்டிகையும், காளிகாதேவியும், பூமாதேவியும் இருக்கிறார்கள்.

கங்காதேவி விஷ்ணுவின் தேகத்திலிருந்து நீர்வடிவாகப் பிறந்து பூமியை அடைந்தவள். இவள் சிவபெருமானின் சடையில் இருக்கிறாள். தூய்மையானவள். இவளை வணங்கி ஸ்னானம் செய்வோர் கோலோகத்திற்குச் செல்வார்கள். ஞானிகளுக்கும் முனிவர்களுக்கும் சகல சித்திகளையும் வழங்குபவள்.

துளசிதேவி மஹாவிஷ்ணுவுக்கு மிகவும் பிரியமானவள். பதிவிரதையான இவளைப் பூசிப்போர் தென்திசையில் முத்தியடைவார்கள். மிகவும் இலகுவாக இவளை வணங்கி அருள்பெறலாம்.

மானஸாதேவி காசிப முனிவரின் மனதில் தோன்றியவள். இவளை ‘விசுவபூஜிதாஜகத்கௌரி’ என்றும் ‘சைவை’ என்றும் ‘வைஷ்ணவி’ என்றும் ‘நாகேஸ்வரி’ என்றும் ‘விவிகரி’ என்றும் ‘சித்தயோகினி’ என்றும் அழைப்பர். இவளை வணங்குவோருக்கு நாகதோஷம் நீங்குவதோடு சர்ப்பங்களால் கண்டம் ஏற்படமாட்டாது. தன்னை வணங்குவோருக்கு மானஸாதேவி சகல ஜஸ்வரியங்களையும் வழங்குவாள். நாக வழிபாடாக மானஸாதேவியின் வழிபாடு பண்டுதொட்டு இன்றுவரை உள்ளது.

முருகனுக்கு சக்தியாக விளங்கும் தேவசேனை என்பவளை சஷ்டிதேவி என்பர். இவள் பிரகிருதிதேவியின் ஆறாவது அம்சத்திற் பிறந்தவள். இவள் குழந்தைப்பிள்ளைகளின் தெய்வம் எனப்படுவதால் புத்திரப்பேறு இல்லாதவர்கள் இவளை வணங்கிப் புத்திரப்பேற்றை அடைகின்றார்கள்.

மங்கள சண்டிகை எக் கருமங்களுக்கும் மங்களம் தந்து அவற்றை நல்ல முறையில் நடக்க உதவுபவள்.

மநுவசம்சத்தில் தோன்றிய மங்களன் என்பவன் இவளைப் பூசித்துச் சகல சௌபாக்கியங்களும் பெற்றமையால் இவளுக்கு மங்கள சண்டிகை என்ற நாமம் உண்டானது. இவளைத் துர்க்காதேவி என்றும் சொல்வார்கள். செவ்வாய்கிழமை இவளுக்கு உகந்த நாள். இவளை வணங்குவோர் செவ்வாய்க் கிழமைகளில் விரதமிருத்தல் வேண்டும். கன்னிப் பெண்கள் திருமணமாகாதிருந்தால் செவ்வாய்கிழமைகளில் விரதமிருந்து இவளை வணங்கினால் திருமணம் நடைபெறும். தடைப்பட்ட காரியங்கள் நிறைவு பெறும்.

துர்க்கையின் மூர்க்க வடிவே காளிகாதேவி. கம்பநிசும்பர்களின் கொடுமைகளை அழிக்கத் தோன்றியவள். மிகவும் வலிமை மிக்க வரங்களை அளிக்கவல்லவள். அதுபோலத் தீயவர்களையும் கொடுமையான முறையில் தண்டிக்கக் கூடியவள். மஹாவிஷ்ணுவின் மீது அதீத பற்றுக் கொண்டவள். அரசர்களால் பூசிக்கப்பட்டவள்.

பூமாதேவி உலகத்தைத் தாங்குபவள். பிரகிருதியின் அம்சங்களாற் பிறந்தவள். எல்லோருக்கும் எல்லாவற்றையும் வழங்கும் தாயானவள். இவளை நம்பியே உயிர்கள் அனைத்தும் வாழ்கின்றன.

இந்து மதம் உலகைப் பெண்ணாகவே சிருஷ்டித்துள்ளது. அத்துடன் உலகில் நடைபெறும் காரியங்களுக்கெல்லாம் பெண் தெய்வங்களே காரணமென்றும் கூறுகிறது. சக்தி தன் அம்ச ரூபங்களாக ஐந்து பெண்களைப் படைத்து அவர்கள் மூலமே சகல செயல்களையும் செய்விக்கிறது. இந்த வகையில் சக்தியின் கலாரூபங்கள் என பல செயல்கள் உருவாக்கப்பட்டு அவற்றிற்கென பல பெண் தெய்வங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மனிதனின் ஒவ்வொரு

செயலும் தெய்வத்துடன் சம்பந்தப்பட்டதென்று இந்து சமயம் கூறுகிறது. சாக்த சமயம் மனிதனின் செயல்கள் யாவும் பெண்ணுடன் சம்பந்தப்பட்டதென்று கூறுகிறது. அது பற்றிப் பார்ப்போம்.

அக்கினியின் மனைவியான ஸ்வஹாதேவி இல்லாவிட்டால் அக்கினி மூட்ட முடியாது. தானம் தவம் ஓமம் செய்தல் போன்றன நடைபெறாது. அவிப்பாகத்தைத் தேவர்கள் பெறமுடியாது.

யக்ஞ பத்தினிகளான தளைதேவியையும் தீாதேவியையும் வணங்காவிட்டால் உலகில் எந்தச் செயலும் நடைபெறமாட்டாது.

ஈசானபத்தினியான சம்பத்துதேவியைத் தொழாவிட்டால் வறுமை உண்டாகும்.

உத்தியோக பத்தினியான திரியை என்னும் தெய்வத்தைத் தொழாவிட்டால் உலகம் செயலற்று சோம்பல் அடைந்துவிடும்.

சுகர்மபத்தினிகளான சம்சித்திதேவி, கீர்த்தி தேவி ஆகிய இருவரையும் தொழாவிட்டால் எவருக்கும் கீர்த்தி, புகழ், மங்களம் என்பன கிடைக்காது.

பிரதிஷ்டை என்ற புண்ணிய பத்தினியைத் தொழாவிட்டால் காரியங்கள் எதுவும் செய்யமுடியாத நடைப்பிணங்களாகவே மக்கள் இருப்பர்.

மோகபத்தினிகளான தயாதேவி, பதிவிரதாதேவி என்ற இருவரையும் வழிபடாவிட்டால் செய்யும் செயல்களால் எந்தவிதமான பயனும் ஏற்படமாட்டாது.

சதிதேவியை வணங்காவிட்டால் நல்ல உறவினர்களோ நல்ல நண்பர்களோ கிடைக்க மாட்டார்கள்.

கபிலரின் பத்தினியான திருதேவியை வணங்காதவர்கள் பலமிழந்து கோளைகளாவார்கள்.

ஆதிசேடனின் பிரியபத்தினியான துஷ்டிதேவியின் அனுக்கிரகமில்லாதோர் மகிழ்ச்சியாக ஒரு கணமும் வாழமாட்டார்கள்.

வாயுவின் பத்தினியான சுவஸ்திதேவியைப் போற்றித் துதித்த பின்பே தானம் வழங்குதல் வேண்டும். இல்லாவிட்டால் வழங்கப்படும் தானத்தால் எப்பலனும் உண்டாகாது.

பிதுர்க்களின் பத்தினியான சுவதாதேவியை உச்சரிக்காது கொடுக்கப்படும் பிதுர்த்தானம், பிதுர்பூசைகள் யாவும் பயனற்றுப்போம்.

புஷ்டி என்பவள் கணேசரின் தர்மபத்தினி. இவள் உயிர்களுக்குப் பலத்தையும் நம்பிக்கையையும் கொடுப்பவள். இவளில்லாவிட்டால் உலகம் பாலைவனமாகிவிடும். இவள் கிருதாயுகத்தில் உருவமற்றவளாகவும், திரோதாயுகத்தில் நுண்ணுருவினளாகவும், துவரகாயுகத்தில் பூரணத்துவம் பெற்றவளாகவும் இருந்தாள். இவள் தனது சகோதரனான கபடனுடன் சேர்ந்து எல்லா வீடுகளிலும் இருப்பாள்.

சகல மக்களாலும் வேண்டப்படுகின்ற சுசீலபத்தினிகளாக சாந்தியும், லைஜையும் இருக்கின்றனர். இவர்களில்லாவிட்டால் மனிதர்கள் நிம்மதியின்றிப் பைத்தியக்காரர்களைப் போல வாழ்வார்கள்.

தியானபத்தினிகளான புத்தியும் மேதையும் திருதியும் மக்களுக்கு அறிவையும் துணிவையும் நம்பிக்கையையும் கொடுக்கின்றனர். இவர்களில்லாவிட்டால் உலகத்தவர்களிடம் அறிவும் புத்தியும் இராது.

பிரபஞ்சவடிவமான பரமாத்மாவுக்கு ஆதாரமாக இருப்பவள் காந்தி. இவள் தர்மத்தின் பத்தினி.

பிரபையும் தாதையும் தேஜஸ்சைக் கொடுக்கின்றனர். இவர்களின் துணையுடன் தான் பிரம்மா உலகைச் சிருஷ்டிக்கிறார். இவள் இல்லாவிட்டால் உலகம் இயங்காது.

காலத்தின் பத்தினிகளாக விளங்குபவர்கள் சக்தி, இரவு, பகல் என்ற மூன்று தேவிகள். இவர்களில்லாவிட்டால் பிரம்மாவால் கூடக் காலத்தைக் கணிக்க முடியாது.

மதிபத்தினியாக இருப்பவள் லஷ்மி. இவள் தானியங்களாக உருவகிக்கப்பட்டு மக்களால் வழிபடப்படுகிறாள்.

லோகபத்தினிகளான பசியும் தாகமும் உலக உயிர்கள் அனைத்திலும் வியாபித்திருந்து துன்பத்தையும் இன்பத்தையும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதுபோல காலக்கினிதேவியும் நித்திராதேவியும் உலகத்து உயிர்கள் அனைத்திலும் நிலைத்திருக்கின்றனர். இது போலவே தந்தரையும் (சோம்பல்) பிரீதியும் அகத்தின் பத்தினிகளாக உலக உயிர்கள் அனைத்திலும் வியாபித்திருக்கிறார்கள். இது போலச் சிரத்தையும் பக்தியும் ஜீவன் முத்தர்களிடம் நிறைந்திருக்கின்றனர்.

காலகன்னிகளான மிருதயுதேவியும், ஜரையும் ஜுரத்திற்குப் பத்தினிகளாக இருக்கின்றனர். இவர்கள் இல்லையானால் பிரம்மனால் படைக்கப்பட்ட உலகம் பல்வேறு துன்பங்களுக்குள்ளாகி அழிந்துவிடும்.

இதுதவிர அம்பிகை பல்வேறு கலாரூபங்களெடுத்து மக்களுக்கருள் செய்து வருகிறாள். அதிதி, காமதேனு, திதி, கர்த்துரு, வினதை, தது, ரோகினி, ஸம்ஸ்ஞா, சதருபை, தாரை, சசி, அகலிகை, அருந்ததி, அநசுயை, தேவஹுூதி, பிரசூதி,

லோபா, முத்திரை, மேனகை, பிரசித்தி, வித்தியா தேவி, குந்தி, தமயந்தி, தேவகி, யசோதை, திரௌபதி, காந்தாரி, சௌபியா, சக்தியவதி, குலோத்வஹா, மண்டோதரி, சுபத்திரை, கௌசல்யா, ரேவதி, கௌரவி, சத்தியயாமை, காளிந்தி, லஷ்மனை, ஜாம்பவதி, அக்னிஜிதி, ருக்மணி, சீதை, காளி, மித்ரவிந்தை, பரிமளகந்தி, உஷா, சித்திரலேகை, பானுமதி, மாயவதி, ரேணுகை, ரோணுகை, ஏகதந்தை முதலிய பெண்கள் பிரகிருதியின் கலையாக இருந்து மக்களுக்கு அருள் செய்து வருகின்றார்கள்.

இது தவிரச் சாக்தமதம் சக்தி எடுத்த வடிவங்களைப் பற்றியும், அவ்வடிவங்கள் எதற்காக எடுக்கப்பட்டனவென்றும் விபரமாகக் கூறுகின்றது. இவ்வடிவங்களைப் பற்றித் திருமந்திரமும் கூறுகிறது. சதாசிவநாயகி என்று சொல்லப்படும் திருவருளம்மையான திரிபுரையானவள் பல வடிவங்கள் எடுத்து அடியவர்களுக்கு அருள் புரிவதாகத் திருமந்திரம் கூறுகிறது. திருவருளம்மை பல்வேறு வடிவங்கள் எடுக்கும் போது அவள் தோன்றிய தோற்றங்களைப் பற்றியும், அவள் அணிந்த ஆடை, ஆபரணங்களைப் பற்றியும் திருமந்திரம் கூறுவதையே சாத்கமதமும் கூறுகிறது.

திருவருளம்மை நாதவடிவினள் என்று திருமந்திரம் கூறுகிறது. சக்தியின் வடிவங்களில் ஒன்றான 'பரை' நாதவடிவினள்.

பஸ்யந்தி என்ற சக்தியின் வடிவம் ஓங்கார வடிவமானது. அது போலத் திரிபுரையும் ஓங்கார வடிவமானவள்.

மத்யமா என்ற சக்தியின் வடிவம் கலைவடிவானது. தூய வர்ண மயமானது. அக்கினிச் சுவாலையைப் போல தெளிவாகத் தெரியக்கூடியது.

வைகரி ஒளிமயமானவள். இசையுடன் பாடி வழிபடுபவர்களுக்கு நேரில் தோன்றி வரமளிப்பவள்.

சுரபி என்ற சக்தி வடிவம் மகாவிஷ்ணுவால் பிருந்தாவனத்தில் உருவாக்கப்பெற்றது. சுரபி பசு வடிவாகத் தோற்றமளிப்பவள்.

ராதிகாதேவியின் வசப்பட்டே உலகம் இயங்குகிறது. இவளின் அருளின்றி ஆத்மசொரூப நிலையை அடையமுடியாது.

பூமாதேவியை வசுதாதேவி என்றும் அழைப்பர்.

வாராஹிதேவி பரமேஸ்வரியின் சேனாதிபதியாக இருப்பவள். தனது கைகளில் உலக்கை, கலப்பை, கத்தி, கேடயம், சக்கரம், சங்கு முதலியவற்றைத் தாங்கியவள். இப்படியான உருவைப்பற்றி திருமந்திரம் கூறுவதை முன்பே எழுதியுள்ளேன்.

ஸ்ரீமகர ப்ரத்யங்கிராதேவி சிவனின் நெற்றிக்கண்ணில் இருந்து தோன்றி நரசிம்ம அவதாரம் எடுத்த திருமாலின் உக்கிரத்தை அடக்கியவள்.

அன்னை சாமுண்டி வடிவெடுத்து சண்டமுண்டர்களை அழித்தவள்.

அன்னை இரக்தநந்தி வடிவமெடுத்து விப்பிரசித்திக்குமாரனைக் கொன்றாள்.

அன்னை பீமை வடிவெடுத்து தாண்டி என்ற அசுரனைக் கொன்றவள்.

அன்னை மூகாம்பிகை வடிவமெடுத்து மூகாசுரனாக அழித்தாள்.

அம்பிகை அடியவர்களுக்கு அருளவும், அடியவர்களைக் கொடுமைப்படுத்திய அசுரர்களை அழிக்கவும் இப்படியான பல வடிவங்களை எடுத்ததாகச் சாக்தமதம் கூறுகிறது.

சிவனோடு கூட இருந்து உலகைப்படைத்து, காத்து, அருளி, மறைத்து, அழித்து வரும் சக்தியானவள் சிவன் தாண்டவ நடனம் புரியும் போது தானும் சேர்ந்து ‘லாஸ்யம்’ என்ற நடனத்தை ஆடுவாள். சிவன் தாண்டவ நடனம் புரியும் போது ஒவ்வொரு நடனத்திற்கும் ஒவ்வொரு தேவியர் தோன்றியதாகக் கூறப்படுகிறது.

சிவன் ஆனந்த தாண்டவம் ஆடியபோது அம்பிகை பெற்ற நாமம் சைலபுத்ரி. சிவன் சந்தியா தாண்டவ நடனம் ஆடும்போது அம்பிகை பெற்ற நாமம் கூஷ்மாண்டா. சிவன் திரிபுர தாண்டவம் ஆடும் போது அம்பிகை பெற்ற நாமம் பிரம்மசாரிணி. சிவன் ஊர்த்துவ தாண்டவம் ஆடும் போது அம்பிகை பெற்ற நாமம் சந்திரகாந்தா. சிவன் புஜங்க தாண்டவ நடனம் ஆடிய போது அம்பிகை பெற்ற நாமம் ஸ்கந்தமாதா. சிவன் முனிதாண்டவம் ஆடியபோது அம்பிகை பெற்ற நாமம் கார்த்தியாயினி. சிவன் பூதத்தாண்டவ நடனம் ஆடியபோது அம்பிகை பெற்ற நாமம் கவராத்ரீ. சிவன் சுதாத் தாண்டவம் ஆடிய போது அம்பிகை பெற்ற நாமம் மஹாகௌரி. சிவன் சிருங்காரத் தாண்டவம் ஆடியபோது அம்பிகை பெற்ற நாமம் ஸித்திதாத்ரீ.

சிவன் அம்பிகையை விலக்கிவிட்டு எத்தொழிலையும் செய்யவில்லை. தாண்டவ நடனங்களின் போது தோன்றிய நவசக்திகளையும் தனித்தனியாக வழிபடுவோருக்கு அவர்கள் சகல சௌபாக்கியங்களையும் அளிப்பர். சைலபுத்திரியை

நவராத்திரிக்கு முதல் நாள் மஞ்சள் கலந்த அரிசி மாவால் கோலமிட்டு வணங்குதல் வேண்டும். இப்படி வணங்கும் போது இரண்டு வயதுப் பெண்குழந்தைக்கு அம்பிகை போல வேஷமிட்டு பிரசாதங்கள் படைத்து வணங்கினால் தாம் விரும்பியவற்றைப் பெற்று நோயின்றி வாழலாம். கஷ்மாண்டாதேவியைப் பூசிப்போர் மூன்று வயதுப் பெண் குழந்தையை அம்பிகையாக உருவகித்து அலங்கரித்து பிரசாதங்கள் படைத்து பூசித்தல் வேண்டும். இப்படிப் பூசித்தால் செல்வம் மிகுந்த வாழ்வும் நிம்மதியான குடும்பமும் கிடைக்கும். அஸ்த்திரப் பயிற்சியாளர்களுக்கு ஏற்ற பலனும் கிடைக்கும். பிரமசாலினி என்ற தேவியை வணங்குவோர் குங்குமம் கவர்ந்த அரிசிமாவால் கோலமிட்டு நான்கு வயதுப் பெண்பிள்ளையை அம்பிகையாக உருவகித்து அலங்கரித்து பிரசாதங்கள் படைத்து தில்லையெம் பெருமானை நினைத்து வணங்க வேண்டும். சந்திர காந்தா தேவியைப் பிரார்த்தித்தால் தடைப்பட்ட திருமணங்கள் நடைபெறும். கிரகதோஷம் நீங்கும். இவளை வணங்குவோர் ஐந்து வயதுப் பெண்குழந்தையை அம்பிகையாக உருவகித்து அலங்கரித்து பிரசாதங்கள் படைத்து வணங்குதல் வேண்டும். கன்னிப் பெண்கள் இவளை வணங்கினால் திருமணம் சிரமமின்றி நடைபெறும். ஸ்கந்தமாதாவை வணங்குவோர் அரிசிமாவால் கோலம் போட்டு ஆறுவயதுப் பெண்பிள்ளையை அம்பிகையாக உருவகித்து பிரசாதங்கள் படைத்து வணங்குதல் வேண்டும். இவளை வணங்கிய தேவர்கள் சாபவிமோசனம் பெற்றனர். இவளை வணங்கும் தேவர்களை யாரும் சபிக்க முடியாது. இவளை வணங்குவோரை விஷம் தீண்டமாட்டாது. எந்த விஷமும் இவர்களைப் பாதிக்காது. கார்த்திகாயினி தேவியை

வணங்குவோர்க்கு கண்களில் உண்டாகும் நோய்கள் எவையும் உண்டாகாது. இவளை ஏழுவயதுப் பெண்பிள்ளையை அம்பிகையாக உருவகித்து அரிசிமாவில் கோலமிட்டு வெண்நிறப் பூக்களால் அர்ச்சித்து வணங்குதல் வேண்டும். கலராத்திரிதேவியை வணங்குவோருக்கு இளமை குன்றாதிருக்கும். வனப்பும் செல்வமும் கூடியிருக்கும். இவளை வணங்குவோர் எட்டு வயதுப் பெண்ணை அம்பிகையாக உருவகித்து அலங்கரித்து பிரசாதங்கள் படைத்து அரிசிமாவினால் கோலமிட்டு கருநீலப் பூக்களால் அர்ச்சித்து வணங்குதல் வேண்டும். மஹாகௌரியை வணங்குவோரின் எண்ணிய எண்ணங்கள் ஈடேறும். வர்த்தகர்களுக்கு வர்த்தக விருத்தி ஏற்பட்டு பெரும் பொருள் சேரும். விபத்துக்கள் உண்டாகாது. இவளை வணங்குவோர் அரிசிமாவில் கோலம் போட்டு எட்டு வயதுப் பெண்ணை அம்பிகையாக உருவகித்து வணங்குதல் வேண்டும். ஸித்திதாத்ரி தேவியை வணங்குவோர்க்குத் திட்டமிட்டுச் செய்யும் கருமங்கள் யாவும் நிறைவேறும். வாழ்வு இனித்து இன்பமளிக்கும். கலைஞர்கள் மேன்மையடைவார்கள். பரிசுகள் பாராட்டுக்கள் கிடைக்கும். வாக்குகள் பலிதமாகும். இவளை வணங்குவோர் பத்து வயதுக்குரிய பெண்ணை அம்பிகையாக உருவகித்து அலங்கரித்து, பிரசாதங்கள் படைத்து, அரிசிமாவினால் கோலமிட்டு, செந்நிறப் பூக்களால் அர்ச்சிக்க வேண்டும். கரும்பை இவள் விரும்புவதால் கரும்பையும், கருப்பஞ்சாற்றில் இருந்து தயாரிக்கப்படும் உணவுகளையும் படைத்தல் சிறந்தது.

அம்பிகை பல்லாயிரக் கணக்கான சக்தி வடிவங்களைப் பெற்றதாக அபிதான சிந்தாமணியும் திருமந்திரமும் கூறுகிறது. இச்சக்தி வடிவங்களில் முக்கியமானது பராசக்தி வடிவம்.

இப்பராசக்தி பத்து வடிவமெடுத்துப் பற்பல லீலாவிநோதங்களை நிகழ்த்தியுள்ளதாகச் சாக்தம் கூறுகிறது. இப்பத்துச் சக்தி வடிவங்களையும் ‘தசமஹாவித்தியா’ என்று சொல்வர். சக்தி, காளி, தாரா, திரிபுராசுந்தரி, புவனேஸ்வரி, திரிபுரவைரவி, சின்னமஸ்தா, தூமாவதி, பகளாமுகி, மாதங்கி, கமலாத்மிகா என்றும் பத்து அவதாரங்கள் எடுத்துத் தன்னைப் பூசிப்போரின் இன்னல்களைக் களைவாள்.

**கலாத்மிகா** என்றால் எல்லையற்ற அழகுள்ளவள் என்று பொருள். மஹாலஷ்மியைப் போல அழகுடனும் பொலிவுடனும் வனப்புடனும் எவ்வேளையிலும் இருப்பவள். அமுதத்துடன் இவள் பிறந்தவள். சந்திரனது ஒளியாக இவள் இருக்கிறாள். இரு தாமரைப் பூக்களைத் தன்னிரு கரங்களிலும் தாங்கியவள். மற்றிரு கரங்களால் அடியவர்க்கு அபயம் அளிப்பவள். நான்கு யானைகள் எப்பொழுதும் இவள் மீது நீர்த்துளிகளை அள்ளி வீசிறிக்கொண்டிருக்கும். செழுமையும், தூய்மையும், குளிர்மையும், அழகும் மிக்க பத்தினிப் பெண் இவள்.

**திரிபுரசுந்தரி** தான் மூவுலகிலும் அழகி. வித்தியா, லலிதை, இராஜராஜேஸ்வரி, காமாட்சி, காமகோடி என்று பல பெயர்களை உடையவள். முப்புரங்களுள்ளும் அன்பாகவும், அழகாகவும் இருந்து அவற்றை இயக்குபவள். இவள் பாசமும், அங்குசமும், ஐந்து மலர்ப்பாணங்களும், கரும்பும், வில்லும் கொண்டவள். இவள் ஸ்ரீசக்கரத்தின் மத்தியில் சகல சக்திகளுடனும் அமர்ந்திருந்து தன்னைப் பூசிப்பவர்களுக்கு அருளுபவள். இவள் ஐந்தொழில்களையும் புரிபவள். பிரம்மனும், விஷ்ணுவும், ருத்திரனும், மகேஸ்வரனும் இவளது இருக்கைக்குக் கால்களாக உள்ளனர். சதாசிவன் இவளது

அழகுப் பீடமாக இருக்கிறார். உலக நாயகியான இவளை வணங்குவோர் சகல ஐஸ்வரியங்களையும் பெறுவர்.

**மாதங்கி** காஞ்சிக்காமாட்சியின் மந்திரினி. எனினும் இவள் பூரண மகாசக்தியான மதுரை மீனாட்சியாகத் திகழ்பவள். இவளது ஒரு கரத்தில் பச்சைக்கிளியும், மறுகரத்தில் வீணையும் உண்டு. கலைகளுக்கு இவள் தலைவி. இதனால் இவளை இராஜமாதங்கி, இராஜசியாமளா என்று அழைப்பர். இவள் மதங்கர் என்ற மாமுனியின் புதல்வி. கீரியும், குண்டலினி என்ற பாம்பும் என்றும் இவளின் அருகிலேயே இருக்கும்.

**தாராவை** நீலசரஸ்வதி, உக்கிரதாரா, சுக்கிலதாரா, நீலதாரா, சித்திரதாரா என்றும் அழைப்பர். இவள் நாற்சந்திகளிலும் கடற்கரைகளிலும் கோயில் கொண்டிருப்பாள். பிரணவ மந்திரத்தைத் தாராவின் மந்திரம் என்றும் சொல்வர். இதிலிருந்து தாராவின் மகிமையைப் புரிந்து கொள்ளலாம். ஸ்ரீராமர் தாராவின் சக்தியில் இருந்து தோன்றியவராகக் கருதப்படுகிறார். இவள் ஆசனத்தில் அமர்ந்திருந்து ஒரு காலைத் தூக்கி மறுகால்த்தொடையில் வைத்தும், மறுகாலால் ஒரு சவத்தை மிதித்துக் கொண்டு இருக்கிறாள். இவளது கரங்களில் மண்டைஓடும் கத்தரிக்கோலும், ஞானவாளும், நீலநிறத்தாமரையும் உண்டு. இவளது திருச்சடையில் நாகம் அமர்ந்திருக்கிறது. அதற்கருகில் சிவபெருமான் அமர்ந்திருக்கிறார்.

அம்பிகையின் உக்கிர வடிவம் தான் காளி. இவள் கருநிறத்தவள். கூரிய நகங்களையும், தொங்கும் நாக்கையும் உடைய இவள் சலங்கையைச் சேர்த்துப் பின்னிய ஆடையை அணிந்திருப்பாள். நான்கு கரங்களையுடைய இவளின் ஒரு

கரத்தில் கத்தியும் மறுகரத்தில் வெட்டிய தலையும் இருக்கும். ஏனைய இரு கரங்களும் அபயமும், வரதமுமாக இருக்கும். காளியை உபாசிப்பவர்கள் வீரர்களாகவும், அரசர்களாகவும் இருப்பார்கள். இவர்களிடம் சகல ஐஸ்வரியங்களும் இருக்கும். பூமாதேவியின் பாரத்தை இவள் குறைப்பவள். யாராலும் அழிக்க முடியாத அசுரா் பலரைக்காளி அழித்தவள். கம்பன் நிகம்பன் என்ற அசுரர்கள் நான்முகனிடம் பெற்ற வரத்தின் மகிமையால் தேவர்களையும் மனிதர்களையும் அழித்து வந்தனர். இரத்த பீசன், தாம்பரன் போன்ற கொடிய அசுரர்கள் இவர்களுடன் சேர்ந்து தேவர்களுக்குக் கொடுமை செய்து வந்தனர். இரத்தபீசன் அதிசக்தி வாய்ந்தவன். இவனது இரத்தத்துளிகளிலிருந்து பல்லாயிரக் கணக்கான அசுரர்கள் தோன்றியவண்ணம் இருப்பர். அதனால் இவனைக் காயப்படுத்தியதும் நிலத்தில் சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தமும் அசுரர்களாக மாறின. இதனால் கலக்கமடைந்த தேவர்கள் அம்பிகையிடம் முறையிட்டனர். அம்பிகை பத்திரகாளியாக உருவெடுத்து இரத்தபீசனைக் கொன்றாள். அவனது உடலிலிருந்து வெளியேறிய இரத்தம் முழுவதையும் உறிஞ்சிக் குடித்தாள். அதனால் இரத்தபீசன் அழிந்தான். இப்படிப் பல கதைகள் காளியின் தோற்றம் பற்றிக் கூறுகின்றன.

மகிசாசுரமா்த்தனி என்று அழைக்கப்படும் காளி தான் சிலப்பதிகாரத்தில் கொற்றவை எனப் போற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. பண்டைக்காலத்தில் அரசர்களே காளிதேவியை வணங்கினர். சோழ அரசனான விசயாலயன் சோழரின் குலதெய்வமாகக் காளியை ஏற்று அவளுக்குப் பல கோயில்கள் கட்டியதாகக் கூறப்படுகிறது. தமிழ் மக்கள் தங்கள்

குலதெய்வமாகக் காளியை வணங்கியதாகப் பண்டைய நூல்கள் பலவும் கூறுகின்றன. அவர்கள் ‘காளியாத்தாள்’ என்றும் ‘அம்மன்’ என்றும் ‘கண்ணாத்தாள்’ என்றும் ‘மாரியம்மன்’ என்றும் காளியை வணங்கிவந்தனர்.

காளிக்கு உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கம் அரசர்களிடையே இருந்தது. வீரர்கள் தமது உடலில் சிறிது அரிந்து நேர்த்திக்கடன் செய்ததாகக் கலிங்கத்துப்பரணி என்ற நூல் கூறுகிறது. காளி நாட்டையும் அதன் எல்லைகளையும் காக்கும் காவல்த் தெய்வமாக அரசர்களால் போற்றப்பட்டாள். இவ்வழக்கம் சேரன் செங்குட்டுவனது காலத்தில் தொடங்கியதாகக் கூறப்படுகிறது. அத்துடன் பேய் பிசாசுகளை விரட்டுபவளாகவும் பில்லி சூனியம் செய்வோரை அழிப்பவளாகவும் காளி கருதப்படுகிறாள். அதனால் மக்கள் அவளை மிகுந்த அன்புடன் வழிபட்டு வந்தனர். காளி அரக்கர்களை அழிக்கும் அசுரசக்தியாக மட்டுமில்லாது அடியவர்களுக்கு அருளும் ஞானசக்தியாகவும் விளங்குகிறாள். காளியைப் போல அருளும் தெய்வம் வேறு எதுவுமில்லை என்று சாக்த மதஞானிகள் கூறியுள்ளனர்.

காளிதாசன், சகல சௌகரியங்களையும் அள்ளிவழங்கும் கலியுகத் தெய்வம் காளி என்று பாடியுள்ளார். பஞ்சகம்மாளர்கள் காளியைத் தமது குலதெய்வமாக இன்றும் வழிபடுகின்றனர். வேதங்களும் உபநிடதங்களும் காளியை வாரிவழங்கும் தெய்வம் என்கின்றன. காளியின் வித்தைக்குச் சமமான வித்தையோ, காளியின் மந்திரத்தால் உண்டாகும் ஞானத்திற்கு மேலான ஞானமோ உலகில் இல்லை. சிவனைப் போலக் காளியும் மூன்று கண்களையுடையவள்; பிறைச்

சந்திரனைத் தனது சடாமுடியில் அணிந்தவள்; சூலத்தைக் கையில் ஏந்தியவள்; சிவந்த சடையினை உடையவள்; கபாலமாலை அணிந்தவள்; உடுக்கையைக் கையில் தாங்கியவள். அதனால் சிவனுக்குரிய சக்திகள் அனைத்தையும் கொண்டவள். காளியைப் பற்றிய பல அரிய தகவல்களைச் சூதசஞ்சிகையும் மார்க்கண்டேய புராணமும் கூறுகின்றன. சிவனின் பெண்வடிவம் தான் காளி என்று மார்க்கண்டேய புராணம் கூறுகிறது. இதைத் திருமந்திரமும் கூறுகிறது.

**பகளாமுகி,** பகளாமுகியின் உடல் முழுவதும் பொன்னைப் போகப் பிரகாசிக்கும் இவள் மஞ்சள் நிறமுடைய ஆடை ஆபரணங்களையே அணிபவள். இவளை வணங்குவோரும் மஞ்சள் உடையும், மஞ்சள் ஆபரணங்களும் அணிந்து மஞ்சள் நிறத்தில் ஜெபமாலை செய்து அணிந்து இவளது மந்திரங்களைச் செபித்தல் வேண்டும். இப்படிச் செய்து பகளாமுகியின் அனுக்கிரகத்தைப் பெறுவோருக்கு நீருக்குள்ளும் நெருப்புக்குள்ளும் வாழும் சக்தி கிடைக்கும். இவர்கள் விரும்பிய நேரம் இவர்களின் கட்டளைக்குப் பணிந்து வர்ணபகவான் மழையைத் தருவார். இவள் கூர்ம அவதாரத்தின் உட்சக்தியாக விளங்குபவள்.

**புவனேஸ்வரி**, புவனேஸ்வரியின் அருளால் தான் பூமியில் உயிர்கள் உண்டாயின. புவனத்தை இவள் ஆள்வதால் புவனேஸ்வரி என்ற நாமத்தைப் பெற்றவள். இவனிள் கட்டளைப்படியே ஜீவராசிகள் தோன்றுகின்றன.

**சின்னமஸ்தா**, வஜ்ராயுதத்தால் இந்திரன் மேகங்களைத் தாக்கும் போது உண்டாகும் மின்னலே சின்னமஸ்தா. இவளது ஒருகையில் துண்டித்த தலையொன்று இருக்கிறது. மறுகரத்தில் கத்தரிக்கோல் உள்ளது. இவளது உருவம் கோரமாக

இருப்பினும் செயல்கள் அன்பு கலந்த அருள் உள்ளவை. இவளே பரசுராம அவதாரத்தின் மூலசக்தி என்று கருதப்படுகிறாள். பரசுராமர் மஹாவிஷ்ணுவின் ஆறாவது அவதாரம். அதுபோல இவள் ஆறாவது மஹாவித்தையாவாள். இவள் '<u>ஷஷ்டிதேவி</u>' என்றும் அழைக்கப்படுகிறாள்.

**தூமாவதி**, தூமாவதி மிகுந்த சோம்பலை உடையவள். அழிவிற்கும் ஆக்கத்திற்கும் இடையே இருப்பவள் இவள். மஹாவிஸ்ணுவின் யோகநித்திரை என்று கூறப்படும் இவளை இருட்சக்தி என்றும் புகைச்சக்தி என்றும் சொல்வர். இவள் எதையும் மறைத்தும் விகாரப்படுத்தியும் காண்பிப்பதால் இவள் ஏமாற்றுச் சக்தியின் அதிதேவதை எனக் கூறப்படுபவள். இவளது ஒரு கரத்தில் முறம் இருக்கிறது. மற்றக் கரத்தால் அடியவர்களுக்கு அருள் பாலிக்கிறாள்.

**திரிபுரபைரவி,** 'திரிபுரபைரவி அன்பே உருவானவள். பைரவி என்றால் பயத்தை உண்டுபண்ணுபவள் என்று பொருட்படும். ஆனால் திரிபுரபைரவி அன்புருவானவள். துர்க்கையின் அம்சம் கொண்ட இவள் உலகைப் படைக்கவேண்டுமென்பதற்காகத் தவம் செய்தவள். ஞானமாதாவான இவள் ஜபமாலையையும் ஞான முத்திரையையும் அபயம் கொடுத்தருளவல்ல வரமுத்திரையையும் கரங்களிற்கொண்டவள். முக்கண்ணை உடைய இவள் பிறைச் சந்திரனைத் தலையில் சூடியிருக்கிறாள்.

இந்துசமயம் உலகைப் பெண்ணாகவே உருவகித்துள்ளது. இவ்வுலகில் காணப்படும் பொருட்கள் யாவற்றையும் பெண்ணாகவே கொண்டுள்ளது. இந்தவகையில்

சிவனும் பெண் என்றே சொல்லப்படுகிறான். சிவனின் நெற்றிக்கண்ணில் இருந்து வெளிப்பட்ட சக்திகளான முருகன், வீரபத்திரர், வைரவர் போன்றவர்களும் பெண்கள் தான் என்று சாக்த ஞானிகள் கூறுகின்றனர். முருகன் அம்பிகையென்றும், வைரவரும் வீரபத்திரரும் காளியென்றும் கூறுவாருமுண்டு. இது பற்றித் திருமந்திரம் கூறியவற்றை முன்பே எழுதியுள்ளேன்.

இந்த வகையில் இந்துக்களால் வணங்கப்படும் சப்த மாதர்களைப் பற்றியும் சிறிது கூறுதல் வேண்டும்.

**பிராமி,** செந்தாமரையில் வீற்றிருப்பவள். நான்கு முகங்களையும் ஆறு கரங்களையும் உடையவள். பிரம்மனின் சக்தியான இவள் படைத்தற் தொழிலுக்குப் பிரமனுக்கு உதவி புரிகிறாள். இவளில்லாவிட்டால் பிரம்மாவால் இயங்க முடியாது.

**மகேஸ்வரி,** சிவனது சக்தி. சிவனது இடப்பாகத்தில் அமர்ந்திருப்பவள். சிவனோடு இவள் சேர்ந்திருக்காவிட்டால் உலகின் இயக்கம் நின்றுவிடும்.

**கௌமாரி,** முருகனின் சக்தி. முருகனைப் போல இவளும் ஆறு முகங்களையும் பன்னிரு கைகளையும் கொண்டவள். இதில் இருகரங்களில்வரத அபயமுத்திரைகள் உள்ளன. இதனால் அவள் மக்களுக்கு அருள் புரிபவள். ஏனைய கரங்களில் வேல், கொடி, தண்டம், பாத்திரம், அம்பு, வில், மணி, தாமரை, சேவல், பரசு என்பன உண்டு. முருகனைப்போல ஆறு திருமுகங்கள் உடைய இவள் பதின்மூன்று கண்களை உடையவள். இவள் மயிலை வாகனமாகக் கொண்டவள்.

**வைஷ்ணவி,** விஷ்ணுவின் சக்தியாகத் திகழும் வைஷ்ணவி நீலநிறமானவள். விஷ்ணுவைப் போலவே இருக்கும் இவள் கருடனை வாகனமாகக் கொண்டவள்.

**வராகி**, வராகமூர்த்தியின் சக்தி. மஹாவிஷ்ணு வராக அவதாரமெடுத்த போது சக்தியாகச் செயற்பட்டவள். பன்றியின் முகத்தையும் ஆறு கரங்களையும் உடையவள். இவள் எருமையை வாகனமாகக் கொண்டவள்.

**இந்திராணி,** இந்திரனின் சக்தி. அம்சுமத்போதாகமமும், பூர்ண காரண ஆகமமும் இவளுக்கு நான்கு கரங்கள் உள்ளதாகக் கூறுகின்றன. இவள் யானையை வாகனமாகக் கொண்டவள்.

**சாமுண்டி,** பயங்கரமான தோற்றத்தையுடைய கறுப்பு நிறமானவள். இறந்த மனித உடலை ஆசனமாகக் கொண்டவள். இவளுக்குப் பத்துக்கரங்கள் உண்டு.

பெண் தெய்வவழிபாடுகளில் மிகவும் முக்கியமானது நவராத்திரி வழிபாடாகும். இது இந்துக்கள் வாழும் வீடுகள், இந்துக்கள் கற்கும் பாடசாலைகள், இந்துக்கள் வணங்கும் கோயில்கள் யாவற்றிலும் மிகவும் விமர்சையாக நடைபெறும் ஒரு விழாவாகும். முதல் மூன்று தினங்களும் துர்க்காதேவிக்காகவும், அடுத்த மூன்று தினங்கள் இலட்சுமிக்காகவும் இறுதி மூன்று தினங்கள் சரஸ்வதிக்காகவும் நடைபெறும். பத்தாம் நாள் வியஜதசமியன்று அம்பிகை மகுடாசுரனைச் சங்கரித்தாள்.

சிவனும் சக்தியும் இரண்டறக் கலந்திருக்கும் நிலையைச் சிவசக்தி என்று சங்கரர் சொல்கிறார். அந்தச் சிவசக்தி தான் துர்க்கையென்று வசிட்டர் கூறியுள்ளார். அத்துடன் சர்வவல்லமை கொண்ட பராசக்தி தான் துர்க்கையென்றும், சிவனின் சக்தியான சதாசிவ நாயகியான திருவருளம்மை தான் துர்க்கை என்றும் திருமூலர் கூறுகிறார். துர்க்கை வீரத்திற்குரியவள். எனினும் இவளை வணங்குவோர்

சகல சித்திகளையும் பெற்று வாழ்வர். அரசர்கள் மட்டுமன்றி சாதாரண குடிமகனும் இவளை வணங்கிச் சித்திகளைப் பெறலாம். இவளைப் பூசித்த காளிதாசன், திருமூலர் போன்றோர் சிறந்த கவித்தன்மையைப் பெற்றனர். சிவன், விஷ்ணு, முருகன் ஆகிய தெய்வங்களின் மூலமான மந்திரசக்திகளை விடத் துர்க்கையின் மூலமந்திரசக்தி மிகுந்த சக்தியுள்ளது. உபநிடதங்கள், பிரமத்துடன் கூடிநிற்கும் சக்தியைப் பரப்பிரம்மம் என்று கூறுகின்றன. இதைப் பிரம்மசக்தி என்றும் கூறப்படுகிறது. பரப்பிரம்மமான பிரம்மசக்தியே துர்க்கை.

தக்கன் செய்த யாகத்திற்கு அம்பிகை மஹாகாளி வடிவத்திலேயே சென்றாள். அவ்வேளையில் அம்பிகை உலகெங்கும் பத்துவிதமான ரூபங்களில் காட்சிகொடுத்தாள். இப்பத்து ரூபங்களும் ஒன்று சேர்ந்த வடிவமே துர்க்கையாகும். ‘‘பக்தர்களுக்கு அருள் புரியவும், என்னை வழிபடுவோருக்கு அவர்கள் வேண்டியதைக் கொடுக்கவும், சாதனைகள் மூலம் என்னை பூஜிப்பவர்களுக்கு இஷ்டசித்திகளை வழங்கவும், உற்சவங்கள், பூசைகள், ஆராதனைகள் செய்வோருக்கு வேண்டிய வரங்களைக் கொடுக்கவுமே நான் துர்க்கையாக அவதரித்தேன்’’ என்று அம்பிகை சிவனுக்குக் கூறியதாகப் புராணங்கள் கூறுகின்றன. சிவபெருமான் அசுரர்களை அழிக்க முருகனைப் படைத்த போது துர்க்கையை நினைத்தார் என்றும் அதனால் துர்க்கை தான் முருகனின் தாய் எனவும் கூறப்படுகிறது. இதனால் துர்க்கையை வழிபட்டால் சிவன், மஹாவிஷ்ணு, முருகன் ஆகியோரை வழிபட்டதற்குச் சமமாகும். மகாபாரதயுத்தம் தொடங்குமுன் மஹாவிஷ்ணுவின் வேண்டுதலின் பேரில் அரிச்சுனன் துர்க்கையை வணங்கினான்.

அதனால் துர்க்கை அர்ச்சுனனின் காண்டிபத்தில் எழுந்தருளி இருந்ததாக மகாபாரதம் கூறுகிறது. சிவன் எந்த வேளையிலும் துர்க்கையில்லாது இருப்பதில்லை. அதனால் சிவலிங்கம் இருக்கும் கோயிலின் கருவறையின் இடப்புறத்தில் துர்க்கையைப் பிரதிஷ்டை செய்தல் வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

நவராத்திரி தினங்களின் நான்காம் ஐந்தாம், ஆறாம் நாட்கள் இலட்சுமிதேவி செல்வத்தைக் குறித்துப் பூசிக்கப்படுகிறாள். சகல ஐஸ்வரியங்களையும் அளிப்பவள் இவள். இவள் திருமகள் எனவும் அழைக்கப்படுகிறாள். இராம அவதாரத்தில் சீதையாகவும், கிருஷ்ண அவதாரத்தில் ருக்குமணியாகவும் அவதரித்தவள். அத்துடன் மங்களங்களுக் கெல்லாம் அதிபதியான ஆதிலஷ்மியாகவும், சகல ஜீவராசிகளுக்கும் உணவளித்துப் பசிப்பிணியைப் போக்கும் தானியலஷ்மியாகவும் விளங்குகின்றாள். இவள் அடியவர்க்கு மனோதிடத்தையும், பலத்தையும், நம்பிக்கையையும் அருளும் தைரியலஷ்மியாகவும் இருந்து பொன், பொருள், புகழ் போன்றவற்றைக் கொடுப்பாள். இவளருளால் தர்ம ஆட்சி நடைபெறும் நாடுகளில் மாதம் மும்மழை பொழியும். தானியங்களுக்கு இவள் தலைவியாக இருப்பதால் இவளது அருளாட்சி பெற்ற இடமெங்கும் தானியங்கள் மலைபோலக் குவிந்திருக்கும். குழந்தைச் செல்வத்தை அருளுபவள் சந்தானலஷ்சுமி. பிள்ளைப்பேறில்லாதவர்கள் இவளை நோக்கி விரதமிருந்தால் பிள்ளைப் பேறு உண்டாகும். கருணைமிக்க இவள் பக்தர்களின் வேண்டுகோள்களை விருப்புடன் தீர்த்து வைப்பாள். வெற்றியை இலக்காக உள்ளோர் ஸ்ரீவிஜயலஷ்மியைப் பூசிப்போர் அனைத்துச் செயல்களிலும்

வெற்றியடைவர். மும்மூர்த்திகளின் தொழில்களும் சீராக நடைபெற உதபுபவள் ஸ்ரீவித்தியாலஷ்மி. இவள் கல்வியையும், செல்வத்தையும் அருளுபவள். அதனால் கலைமகளும் அலைமகளும் சேர்ந்த உருவமானவள். நாதசொரூபமாகச் சிவன் இருப்பதற்குக் காரணமான சக்தியாக இருப்பவள். இவளின் அருளினால் தான் நான்கு வேதங்களும், சாஸ்த்திரங்களும், அறுபத்துநான்கு கலைகளும் உலகெங்கும் நிலைத்துச் செழித்தோங்குகின்றன. சங்க பதுமநிதிகளுக்கு உரியவள் ஸ்ரீதனலஷ்மி. இவள் சகல சௌபாக்கியங்களையும் ஜஸ்வரியங்களையும் தேவர்களுக்கும் மக்களுக்கும் அருளுபவள். குபேரனுக்கு அருள்கொடுத்தவள். அதனால் மகாவிஷ்ணுவுக்குக் குபேரன் கடன் கொடுத்தான். தனலஷ்சுமியை வெள்ளிக்கிழமைகளில் பூசித்து விரதமிருந்தால் எல்லா விதமான செல்வங்களும் கிடைக்கும்.

சரஸ்வதி பிரம்மனால் படைக்கப்பட்டவள். பின் பிரம்மனுக்கே சக்தியானவள். இவள் கல்விக்குரிய தெய்வம். இதனால் மக்கள் வீடுகளிலும் பாடசாலைகளிலும் இவளைப் போற்றி விழா எடுக்கின்றார்கள். நவராத்திரி விழாவின் ஏழாம் எட்டாம், ஒன்பதாம் நாட்கள் சரஸ்வதிக்குரியன. இந்நாட்களில் குறிப்பாக, கல்வி கற்கும் மாணவர்கள் விரதமிருந்து இனிப்புப் பண்டங்களையும் கரும்பையும், தேனையும், கற்கண்டையும், பழங்களையும் பிரசாதமாகப் படைத்து வணங்குவர். பெரும் பெரும் புலவர்களின் நாவில் இவள் வீற்றிருக்கின்றாள். இவளின் அருளைப்பெற்ற புலவர்கள் அரசர்களை விட உயர்ந்தவர்களாகவும்,வலிமையுள்ளவர்களாகவும், வீரர்களாகவும் இருந்ததை நாம் இதிகாச புராணங்களிலிருந்து அறிந்து

கொள்ளலாம். இவளைப் 'பாரதி' என்றும் 'பிரம்மி' என்றும் 'வாணி' என்றும் 'சரஸ்வதி' என்றும் அழைப்பர். வித்தைகளுக்கு அரசியான சரஸ்வதி, ஆதிசக்தியின் ஒரு ரூபம் என்று மார்க்கண்டேய புராணம் கூறுகிறது. இவள் கவிதை, சாஸ்த்திரம், கலை, சங்கீதம், புலமை, கல்வி, வெற்றி முதலியவற்றை அளிப்பவள். அறுபத்துநான்கு கலைகளுக்கும் தலைவியானவள்.

வாரம் ஒருமுறை சரஸ்வதியைப் பூசித்து விரதமிருந்தால் கல்வி, அறிவாற்றல் போன்றவற்றால் பேரும் புகழும் பொன்னும் பொருளும் சேரும். கலைமகளின் அருள் கிடைத்தால் அஷ்டலஷ்சுமிகளினதும் துர்க்கையினதும் கடாச்சம் கிடைக்கும். சரஸ்வதி தேவியை ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விரதமிருந்து தொழுதால் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும். இதை விட ஞாயிற்றுக் கிழமைகளிலும் வளர்பிறை காலங்களிலும் இவ்விரதத்தை அனுஷ்டிக்கலாம்.. இதன் மூலம் அரசர்களைப் போலப் பெருவாழ்வு வாழலாம்.

பெண்தெய்வ வழிபாட்டில் திருவிளக்குப் பூசை மிகவும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. இறைவன் சோதி மயமானவன். நடராஜப் பெருமான் இடது கையில் சோதியை வைத்திருக்கிறார். காளி தன் சடையில் தீப்பந்தை வைத்திருக்கிறாள். திருமூலர் திருமந்திரத்தில் சிவனும், சிவசக்தியும் ஜோதிமயமானவர்கள் என்று கூறுகிறார். அதனால் பெண்தெய்வங்களை வணங்குவோர் திருவிளக்கேற்றிப் பூசை செய்து வருகின்றனர். நெய், தேங்காய் எண்ணெய், இலுப்பை எண்ணெய், நல்லெண்ணைய், விளக்கெண்ணைய், போன்ற எண்ணெய் வகைகளைப் பாவித்து

திருவிளக்கேற்றலாம். திரியாகப்பஞ்சு, வாழைத்தண்டு, தாமரைத்தண்டு போன்றவற்றைப் பயன்படுத்தலாம். அதிகாலை மூன்று மணி தொடக்கம் ஐந்து மணிவரை திருவிளக்கிட்டுத் தேவியரைப் பூசித்தால் சர்வ மங்கலமும் உண்டாகும். தீபமேற்றுவோர் விரும்பியவை கிடைக்கும்.

புராதன காலந்தொடக்கம் பெண்தெய்வங்களை வழிபடுவோர் பலவிதமான விரதங்களை அனுஷ்டித்து வருகிறார்கள். அவற்றில் முக்கியமான சிலவற்றைப் பார்ப்போம்.

**கேதாரகௌரி விரதம்,** புரட்டாதி மாதம் வளர்பிறை நவமியில் தொடங்கி ஐப்பசி அமாவாசை வரை இருபத்தொரு நாட்கள் அனுஷ்டிப்பது. இவ்விரதத்தை ஆண்களும் அனுஷ்டிக்கலாம்.

**நவராத்திரி விரதம்,** புரட்டாதி மாத சுக்கிலபட்ச பிரதமை முதல் நவமியீறாக வரும் நாட்களாகும். இந்நாட்கள் ஒன்பது. சில வேளைகளில் எட்டாகவும் இருக்கும். பத்தாம் நாள் விஜயதசமி. ஒன்பது நாட்களும் மக்கள் விரதமிருந்து கொலு வைத்து தீபமேற்றி பிரசாதங்கள் படைத்து வணங்குவர்.

**வரலஷ்சுமி விரதம்,** ஆவணி மாதப் பௌணமிக்கு முந்திய வெள்ளிக்கிழமைகளில் அனுஷ்டிக்கப்படுவது. உபவாசம் போன்ற கடுமையான விதிகள் அற்ற சாதாரணமான விரதம் இது. மதியவேளை உண்ணலாம்.

**காரடையா நோன்பு,** மாசிமாதம் முடிந்து பங்குனி மாதம் பிறக்கும் வேளையில் அனுஷ்டிக்கப்படும் விரதம் காரடையா நோன்பு அல்லது காமாட்சி நோன்பு எனப்படும். இது சுமங்கலிப் பெண்கள் அனுஷ்டிக்கும் நோன்பாகும். மாங்கல்யமாக மஞ்சள் கயிற்றைக் கட்டுவோர் இந்த நோன்பை அனுஷ்டித்த பின்பே மாங்கல்யக் கயிற்றை மாற்றலாம்.

**கருடபஞ்சமி விரதம்,** நாகதோஷமுடைய கன்னிப் பெண்கள் தமது திருமணம் நடைபெறவேண்டும் என்பதற்காக அனுஷ்டிக்கப்படும் விரதம் கருடபஞ்சமி விரதம். இதை நாகசதுர்த்தி விரதமென்றும் கூறுவர். ஆவணி மாதம் வளர்பிறைப் பஞ்சமித்திதியில் இந்த விரதம் வரும். அவ்வேளை இதை அனுஷ்டித்தல் வேண்டும். இந்நாளில் நாகத்தை வணங்கவேண்டும்.

**ஆவணி மாதப்பௌர்ணமி,** சாவித்திரி என்ற பெண் தன் கற்பின் மகிமையால் யமனிடமிருந்து தனது கணவனை மீட்ட தினமான ஆவணி மாதப்பௌர்ணமி தினத்தில் இவ்விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. பெண்களுக்கு மாங்கல்ய பலத்தைத் தரும் விரதம் இது.

**சாவித்திரி கௌரி விரதம்,** தைமாதம் இரண்டாம் நாள் ஆரம்பித்துத் தொடர்ந்து ஒன்பது தினங்கள் அனுஷ்டிப்பது. விரத காலங்களில் மதிய நேரம் சோறு உண்டு இவ்விரதத்தை அனுஷ்டிக்கும் பெண்களுக்குக் குறைவில்லாத புத்திரபாக்கியமும் லட்சுமீகரமும் கிடைக்கும்.

**மங்களகௌரி விரதம்,** மணமான பெண்கள் தமது மாங்கல்யம் நிலைக்க வேண்டும் என்றும், அது வலிமை பெறவேண்டும் என்றும் நினைத்து அனுஷ்டிக்கும் விரதம் மாங்களகௌரி விரதம். இந்த விரதத்தை அனுஷ்டிப்போரின் வாழ்நாள் நீளும், தீர்க்க சுமங்கலியாக வாழ்வார்; வாழ்கதை வளம் பெறும்.

**ஸ்வர்ணகௌரி விரதம்,** திருமணம் உரிய வயதில் நடக்கவேண்டும் என்றும், உயர்ந்த உத்தியோகத்தில் உள்ள கணவன் கிடைக்க வேண்டும் என்றும் விரும்பிக் கன்னிப் பெண்களும், தீர்க்க சுமங்கலியாக வாழ்நாள் முழுவதும் சகல

சௌபாக்கியங்களோடு வாழவேண்டும் என்று திருமணமான பெண்களும் அனுஷ்டிக்கும் விரதம் ஸ்வர்ணகௌரி விரதம். இவ்விரதத்தை அனுஷ்டித்துத் தான் ருக்மணி பகவான் மஹாவிஷ்னுவைத் திருமணம் புரிந்ததாக வரலாறு கூறுகிறது. இவ் விரதம் ஆவணி மாதம் வளர்பிறைத் திருதியைத் தினத்தில் வரும்.

**யமுனாவிரதம்**, ஒவ்வொரு வருடமும் புரட்டாதி மாதம் சுக்கில பட்ச பஞ்சமித்திதியன்று வரும். அன்று பகல் இவ்விரதத்தைத் தொடங்க வேண்டும். இவ் விரதத்தை அனுஷ்டிப்போர் ரிஷி பஞ்சமி பூசையைச் செய்தல் வேண்டும். இவ்விரதத்தைக் கன்னிப் பெண்களும் சுமங்கலிகளும் அனுஷ்டிக்கலாம். விதவைகளும் ஆண்களும் அனுஷ்டிக்கக் கூடாது. ருதுவாகாத பெண்கள் இவ்விரதத்தை அனுஷ்டித்தால் ருதுவாவர். ருதுவான காலங்களில் தோஷங்கள் இருப்பின் அவை நீங்கும். குழந்தைகள் இல்லாதவர்களுக்குக் குழந்தைப் பாக்கியம் உண்டாகும். யமுனா விரத பூசையை நடுப்பகலில் செய்த பெண்கள் இரவில் ரிஷி பஞ்சமி பூசையைச் செய்தல் வேண்டும். ரிஷி பஞ்சமி விரதப் பூசையை சப்த ரிஷி விரதபூசை என்றும் சொல்வார்கள். இவ்விரதத்தை அனுஷ்டித்து முறைப்படி பூசை செய்வோர் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கப்பெற்றுச் சுகவாழ்வு வாழ்வர். மறுபிறப்பும் சகல ஐஸ்வரியங்களுடன் கூடியதாக இருக்கும்.

**மஹாலஷ்சுமி விரதம்**, ஒவ்வொரு மாதமும் வரும் கடைசி வெள்ளிக்கிழமையன்று காலை குளித்து விரதமிருந்து விநாயகப் பெருமானை வணங்கிய பின் அனந்தபத்மநாதனை வணங்குதல் வேண்டும். அதன் பின் மல்லிகை முல்லை மலர்களால் மாலைகட்டி மஹாலஷ்மிக்கு அணிவித்து

வணங்குதல் வேண்டும். இப்படி இருபத்தொரு வெள்ளிக்கிழமைகளில் நோன்பிருந்து வணங்கினால் அஷ்ட ஜஸ்வரியங்களும் கிடைக்கும்.

**ரோகினி விரதம்,** திங்கட்கிழமைகளில் ரோகினி நட்சத்திரம் வந்து அது வளர்பிறை நாளாகவும் அஷ்டமித்திதியோடு கூடியதாகவும் இருந்தால் அன்று ரோகினி விரதத்தை அனுஷ்டித்தல் வேண்டும். இப்படியான நாட்கள் சிலவே உள்ளதால் இவ்விரதத்தை அனுஷ்டிப்போர் இலட்சுமிதேவியின் கடாச்சத்தைப் பெறுவர். அதனால் இலட்சுமி மனம் மகிழ்ந்து சகல சௌபாக்கியங்களையும் அள்ளி வழங்குவாள்.

**லட்சுமிகுபேர விரதம்,** ல்'மி குபேரவிரதத்தை வெள்ளிக்கிழமைகளில் அனுஷ்டிக்கலாம். விரதம் அனுஷ்டிக்கும் வெள்ளியன்று மஹாவிஷ்ணு கோயிலுக்குச் சென்று அவரையும் மஹால்'மியையும் தாமரை மலர்களால் அர்ச்சித்து வணங்குதல் வேண்டும். இதனால் ல்'மியினதும் குபேரனதும் அருள் கிடைக்கும். இதனால் எடுக்கும் பிறவிகள் தோறும் சகல ஜஸ்வரியங்களுடனும் வாழலாம்.

**சப்தமி விரதம்,** மாசிமாதம் வரும் சுத்த பஞ்சமியன்று ஆரம்பித்து ஐம்பத்தியிரண்டு நாட்கள் தொடர்ந்து அனுஷ்டித்தல் வேண்டும். இந்த விரதத்தை முறைப்படி அனுஷ்டித்தால் மஹால்'மி மனம் மகிழ்ந்து சகல சௌபாக்கியங்களையும் அள்ளிக்கொடுப்பாள். அட்ட ஜஸ்வரியங்களும் கிடைக்கும்.

**உமாசுக்கிரவரை விரதம்**, பார்வதி தேவியைக் குறித்து அனுஷ்டிக்கப்படும். இவ்விரதம் சித்திரை மாத வளர்பிறையில் வெள்ளிக்கிழமைகளில் அனுஷ்டிக்கப்படுகிறது. ஆதிசக்தியான

பார்வதிதேவியாரின் அனுக்கிரகம் இவ்விரதத்தை அனுஷ்டிப்போருக்குத் தப்பாது கிடைக்கும்.

**ஐப்பசி உத்தரவிரதம்,** ஐப்பசி மாதத்தில் உத்தர நட்சத்திரம் வரும் நாளில் அம்பிகையை நோக்கி அனுஷ்டிக்கப்படுவது.

**பங்குனித் திங்கள்,** விரதம் இது பங்குனி மாதத்தில் வரும் திங்கட்கிழமைகளில் அனுஷ்டிக்கப்படுவது. அம்பிகையின் கோயில்கள் தோறும் அடியவர்கள் பொங்கிப் படைப்பர்கள். உஷ்ணம் சம்பந்தமான நோய்கள் ஏற்படாதிருக்க இவ்விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது.

**ஆடிப்பூர விரதம்,** அம்பிகை ருதுவான நட்சத்திரம் பூரம். அதனால் அன்று விரதமிருந்து பொங்கிப் படைக்கும் கன்னிப் பெண்களுக்கு விரும்பிய வாழ்வு கிடைக்கும். ருதுவான போது தோஷங்கள் ஏதுமிருந்தால் அது விலகிப்போகும். திருமணமான பெண்கள் சுமங்கலிகளாக வாழ்வர்.

**பங்குனி உத்தர விரதம்,** பங்குனி உத்தரத்தன்று அம்மைக்குத் திருமணம் நடைபெற்றது. அன்று அம்பிகை மிகவும் மகிழ்வுடன் இருப்பதால் விரதமனுஷ்டிப்போர் கேட்பதையெல்லாம் அள்ளிக் கொடுப்பாள்.

**தை அமாவாசை விரதம்,** தை அமாவாசையன்று அம்பிகை அபிராமிப்பட்டருக்காக உலகைப் பௌர்ணமி தினமாக்கிய நாள். அன்று விரதமிருந்து அபிராமி அந்தாதியை ஓதினால் நடவாத காரியங்கள் இலகுவில் நடந்தேறும்.

எமக்கு முன் வாழ்ந்த பல புலவர்களும், ஞானிகளும், மேதைகளும் சக்தி உபாசகர்களாக இருந்ததை நாம் கண்டு கொள்ளலாம். இவர்களைப்ப பற்றி நாம் சிறிது ஆராய்வோம்.

காளிதாசனைப் போல ஒரு மூடன் உலகில் இல்லை என்று கூடச் சொல்லலாம். மகா மூடனான அவன் நுனிக்கொப்பில் இருந்தவாறு அடிக்கொப்பை வெட்டியவன். அந்நாட்டு அரசனின் மந்திரி இளவரசிக்கு ஒரு மூடனைத் திருமணம் செய்துகொடுத்து அவளின் திமிரை அடக்கவேண்டுமென்று நினைத்துக் காளிதாசனை மணம் செய்து வைத்தார்.. மூடனான தனது கணவனை அறிவாளியாக்கும் வல்லமை கொண்டவள் காளி என்பதைத் தெரிந்திருந்த இளவரசி காளிதாசனைக் காளி கோயிலுக்கு அனுப்பி வைத்தாள். காளிதேவி அவனது நாவில் தனது நாவால் பீஜாஷ மந்திரத்தை எழுதினாள். அதன் பின் காளிதாசன் வடமொழியிலே பல நூல்களைப் பாடினான். காளியின் அருளால் அவன் பெரும் மேதையானான்.

கம்பர் சோழநாட்டைச் சேர்ந்தவர். இவர் காளிதேவியைத் தினமும் பூசித்து வந்தமையால் பெரும் புலவரானவர். சோழ மன்னனான குலோத்துங்கன் ஒட்டகக் கூத்தரையும் கம்பரையும் அழைத்து மஹாவிஷ்ணு இராம அவதாரமெடுத்து வாழ்ந்த வரலாற்றைப் பாடும்படி கூறினான். சில நாட்களின் பின் இருவரையும் அழைத்து ‘இராமகதை எவ்வளவு பாடியுள்ளீர்கள்’ என்று கேட்டான். அதற்கு ஒட்டகக் கூத்தர் கடல்காண்படலம் வரை தான் எழுதிவிட்டதாகக் கூறினார். ஆனால் கம்பர் எதையும் எழுதவில்லை. ஒட்டகக்கூத்தரிலும் பார்க்கத் தான் கூடுதலாக பாடியுள்ளதாகச் சொல்லி ‘திருவானைப்படலம்’ வரையும் எழுதிவிட்டேன் என்றார். அதைக்கேட்ட அரசன் மனம் மகிழ்ந்து கம்பரை நோக்கி, “அப்படலத்தின் ஒரு செய்யுளைப் படியும்” என்றான். கம்பர் காளியை நினைத்தார். செய்யுள்

உடனே பிறந்தது. இரவு வேளையில் கம்பர் சொல்ல மாணாக்கர் எழுதினர். இவ்வேளையில் திருவெற்றியூரில் கோயில் கொண்டிருக்கும் காளி தீவெட்டி பிடித்தாள் என்று கூறப்படுகிறது.

காளமேகப்புலவர் பிறப்பால் வைணவர். சிவனடியாரான மோகனாங்கி மீது காதல் கொண்டு அவளை மணப்பதற்காக சைவராக மாறியவர். சிவசக்தியான ஸ்ரீவித்தியாவை அவர் தினமும் உபாசிப்பவர். கோயிலில் நித்திரை செய்துகொண்டிருந்த போது அகிலாண்டேஸ்வரியான அம்பிகை சிறிய பெண்ணின் உருக்கொண்டு வந்து அவரது நாவில் தாம்பூல எச்சிலை உமிழ்ந்தாள். அன்றிலிருந்து வரதன் என்ற பெயருடைய அந்த இளைஞன் காளமேகப்புலவராகி ஏராளமான கவிதைகளைப் பாடினான்.

இந்து சமயங்களுக்குச் சோதனைகள் உண்டாகும் போது இறைவன் திருஅவதாரம் செய்வது வழக்கம். அதுபோல வேத நெறிக்குச் சோதனை ஏற்பட்ட போது இறைவன் காலடி என்ற ஊரில் சங்கரன் ஆகப்பிறந்தார். சங்கரன் சிறுகுழந்தையாக இருந்த போது இவனது தந்தையார் வெளியூருக்குச் செல்லச் சங்கரனே அம்பிகைக்குப் பூசை செய்தான். அவன் படைத்த நிவேதனங்களைப் பேரொளியாகத் தோன்றிய அம்மை விருப்புடன் உண்டுவிட்டு ஞானப்பாலைச் சங்கரனுக்குக் ஊட்டினார். அம்மையின் அருள் பெற்ற சங்கரன் பல அரிய சமய நூல்களை உலகிற்கு அருளினான்.

ஒரு நாள் நர்மதை ஆற்றுநீர் கரைபுரண்டோடிப் பயிர்களை அழித்தது. மக்கள் வெள்ளத்துடன் அடிபட்டுச் சென்றனர். இதைக் கண்ட சங்கரார் அம்பிகையை வணங்கித் தான் கொண்டு வந்த கமண்டலத்தால் நர்மதை ஆற்று நீரை

அள்ளினார். வெள்ளப்பெருக்கு அக்கமண்டலத்துள் அடங்கியது. சங்கரர் அம்பிகையின் அருளால் அத்வைதத்தை அருளினார். பகவத்கீதைக்கும் உபநிடதங்களுக்கும் பிரம்ம சூத்திரத்திற்கும் சனத்கஜாதிஸத்திற்கும் உரை எழுதினார். மனிஷா பஞ்சகம் என்ற நூலை ஆக்கினார். ஒரு நூலகத்தில் அம்பிகை பெண்ணாக வந்து மும்முறை விஷ்ணு சஹஸ்நாமம் என்ற ஏட்டை எடுத்துக் கொடுத்தமையால் விஷ்ணு சகஸ்நாமம் என்ற பாஷ்யத்தைப் பாடினார். கலைவாணியுடன் காமசாஸ்த்திரத்தைப் பற்றி வாதிட்டு அவளை வென்றார். மதுரை மீனாட்சியையும், காசிவிசாலாட்சியையும் போற்றிப் புகழ்ந்து பல பாடல்களைப் பாடினார். திருவொற்றியூரில் திரிபுரசுந்தரியின் ஸ்ரீசக்கரத்தைப் பிரதிஷ்டை செய்தார். காஞ்சிபுர மன்னனைக் கொண்டு காஞ்சிபுர நகர அமைப்பைச் சக்கரவடிவில் அமைக்கச் செய்து, அச்சக்கரத்தின் மையப்பகுதியில் ஸ்ரீகாமாட்சியின் ஆலயத்தை அமைத்தார்.

சங்கரர் அமைத்த மடங்களுக்கு அன்னையின் பெயர்களையே சூட்டினார். பிறந்த நாள்த் தொடக்கம் இறக்கும் வரை சங்கரர் அன்னையின் நினைவாகவே இருந்தார்.

ஐந்து வயதுவரை குமரகுருபரர் ஊமையாக இருந்தார். அதன் பின் திருச்செந்தூர் முருகனின் அருளால் ஊமைத்தன்மை நீங்கியது. அதன் பின் அங்கையற்கண்ணியின் முன் அமர்ந்து அம்மையைப் பற்றிப் பிள்ளைத்தமிழ் பாடினார். அதை அம்பிகையின் வேண்டுதலின் படி அந்நாட்டரசன் அரங்கேற்றினான். அரங்கேற்றத்தின் போது அம்மை குழந்தைப்பிள்ளையின் வடிவில் வந்து அரசனின் மடியில் அமர்ந்திருந்து ரசித்ததாகவும், பின்பு அரசனின் கழுத்திலிருந்த முத்துமாலையைக் கழற்றி குமரகுருபரருக்கு அணிவித்ததாகவும்

ஒருகதையுண்டு. குமரகுருபரர் ‘மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, நீதிநெறி விளக்கம், மதுரைக்கலம்பகம், திருவாரூர் நான்மணிமாலை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், சிதம்பர செய்யுட்கோவை, சிவகாமியம்மன்இரட்டைமணிமாலை, பண்டாரமும்மணிக்கோவை, காசிக்கலம்பகம், சகலகலாவல்லிமாலை, கைலைக்கலம்பகம் போன்ற பதினாறு பிரபந்தங்களைப் பாடினார். தனது பாடலில் தம்மைப் பாடுவிப்பவரும், கேட்பவரும் அம்மையே என்று குமரகுருபரர் குறிப்பிட்டுள்ளார்.

அபிராமிப்பட்டரின் இயற்பெயர் சுப்பிரமணியம். இவர் அம்மையின் மீது அளவில்லாத பக்தியும், பிரேமையும் கொண்டவர். எனினும் வெளிப்படையாக அம்மையைப் போற்றுவதில்லை. ஒரு நாள் அவர் அம்மையின் நினைவுடன் இருக்கையில் அந்நாட்டரசன் அவரை இன்று என்ன திதி என்று கேட்டான். அன்று அமவாசைத்திதி. அம்பிகை அவரின் பக்தியை உலகிற்கு உணர்த்த விரும்பி பௌர்ணமி திதி என்று கூறவைத்தாள். பட்டரின் பதிலைக்கேட்ட அரசன் அவர் தன்னை அவமதிக்கிராரென நினைத்து அதை நிரூபிக்கும் படி கூறி அக்கினிக்குண்டம் ஒன்றை அமைத்து அதற்கு மேல் உறி ஒன்றைக்கட்டி அதில் பட்டரை ஏற்றிவிட்டான். பூரண சந்திரன் தோன்றாவிட்டால் உறியை அறுத்து விடும்படி ஏவலாளர்களிடம் கூறினான். பட்டர் அஞ்சாது அபிராமியை நினைத்து மனமுருகிப்பாடினார். அன்னை மகிழ்ந்து தனது மூக்குத்தியைக் கழற்றி வானில் எறிய அது பூரண சந்திரனானது. அதன் பின் பட்டர் அபிராமிஅந்தாதி, திருக்கடவூர் கள்ளவாரணப்பிள்ளையார்

பதிகம், அமுதகடேசுவரர் பதிகம், காலசம்ஹார மூர்த்திப்பதிகம், அபிராமியம்மைப் பதிகம் முதலிய நூல்களைப்ப பாடினார்.

தாயுமானவர் திருவானைக்காவில் பதிகொண்டிருந்த அகிலாண்டேஸ்வரி மீது அளவில்லாத பக்தி கொண்டவர். தாயுமானவர் தலைமைக் கணக்காளராக அந்நாட்டரசனின் அரசசபையில் பணியாற்றி வந்தார். ஒரு நாள் அரசின் நிதியறிக்கையை வாசித்துக் கொண்டிருக்கும் போது திடீரென தான் வாசித்துக் கொண்டிருந்த ஓலையைக் கசக்கி வீசினார். அப்பொழுது திருவானைக்கா அகிலாண்டேஸ்வரியின் ஆலயக்குருக்கள் சபைக்கு வந்து; “அகிலாண்டேஸ்வரிக்குக் கற்பூர தீபம் காட்டும் போது அவளது பட்டுச்சேலையில் தீப்பற்றிவிட்டது” என்றார். இதை முன்கூட்டியே அறிந்த தாயுமானவரை அரசர் பணிந்து தனது அரியாசனத்தில் அமர்த்தினார். பின் அரசபதவியை விட்டுத் துறவு வாழ்க்கையை மேற்கொண்ட தாயுமானவர் அம்பிகையைத் தொழுதும், அவரின் புகழைப்பாடியும் வந்தார். “மலைவளர்காதலி, அகிலாண்டநாயகி, பெரியநாயகி’ என்று அம்மையைப்பற்றிப் 1452 பாடல்களைப் பாடினார்.

இராமகிருஷ்ணபரமஹம்சர் அன்னை காளிதேவியின் மீது அளவில்லாத பக்தி கொண்டவர். அவர் ஜகன்மாதாவான அம்பிகையே தனது தாய் எனக்கருதினார். ஒரு குழந்தை தாயிடம் எப்படியெல்லாம் கொஞ்சி விளையாடுமோ அப்படியெல்லாம் இராமகிருஷ்ணபரமஹம்சர் காளியோடு கொஞ்சி விளையாடுவார். இந்நிலையில் ஒரு நாள் அவர் காளிதேவி தன்முன் தோன்றாவிட்டால் தன் உயிரை மாய்த்துக் கொள்வதாகக் கூறித் தற்கொலை செய்ய முயற்சித்தார்.

அப்பொழுது காளிதேவி அவர் முன்தோன்றினாள். அதன் பின் காளிதேவியை முழுமூச்சாக இராமகிருஷ்ணபரமஹம்பர் பூசித்து வந்தார். அவர் தனது மனைவியையும் ஜகன்மாதாவான காளியாகவே கண்டார். அவர் மக்களுக்கு உபதேசங்கள் செய்தார். அவரது உபதேசங்களால் கவரப்பட்ட பலர் அவருக்குச் சீடராகினர். அவர்களுள் மிகவும் முக்கியமானவர் விவேகானந்தர். பிரம்ம சமாசத்தின் தலைவரான பாபுகேசவசந்திரசேனர் பரமஹம்சரோடு நெருங்கிப் பழகியமையால் பரமஹம்சரது உபதேசங்களால் கவரப்பட்டார். அதனால் பரமஹம்சரின் ஈஸ்வரனைத் தாயாக வணங்கும் தத்துவத்தை ஏற்றார். பரமஹம்சர் விடியற்காலை முதல் தன்னை நாடி வந்தவர்களுக்கு உபதேசம் செய்தபடி இருந்தார். அவர் மிகக் கடுமையான நோயுற்ற வேளையிலும் தனது உபதேசங்களை நிறுத்தவில்லை. அவரது உபதேசங்கள், வேதங்கள், உபநிடதங்களைப் பற்றியதாகும். சிறுசிறுகதைகள் மூலம் அவர் வேதாந்ததத்துவத்தைப் பாமர மக்களும் புரிந்துகொள்ளும் அளவிற்கு உபதேசித்தார்.

நமசிவாயர் அம்பிகையின் அருள் பெற்ற அருளாளர். இவரது பாடல்களைக் கேட்டு அம்மை அகமகிழ்வதாகக் கூறுவர். அதனால் அம்மை கனவில் வந்து அவரைப்பாடும்படி கேட்பாராம். அவர் வெற்றிலையைச் சுவைத்தபடியே அம்மையைப் பாடுவார். எச்சிலைத் துப்பிய பின்பும் பாடுவார். ஒரு நாள் இவர் அம்பிகையை நினைத்துப்பாடிய பின் வெற்றிலையைத் துப்பினார். பின் பாடியவாறு வீட்டிற்குச் சென்றார். தன் பின் யாரோ நடந்து வரும் ஓசை கேட்டது. திரும்பிப் பார்த்தார். யாரும் இல்லை. மறுநாள் கோயில் அர்ச்சகர் கோயிற்கதவைத் திறந்த போது அம்பிகையின் மீது

வெற்றிலை எச்சில் துப்பப்பட்டிருந்தது. அர்ச்சகர் பதட்டத்துடன் மன்னனுக்கு அறிவித்தார். அன்று இரவு அம்பிகை மன்னனின் கனவில் தோன்றி; "மன்னவா, நமசிவாயகம் என்னைப் போற்றிப்பாடும் பாடல்கள் மிகவும் இனிமையானவை. அவன் வீதிகளில் செல்லும் போதும் என்னை நினைத்துப்பாடுவான். அவனது இனிமையான பாடலைக் கேட்கும் ஆசையால் அவனுக்குப் பின்னால் சென்றேன். அவன் துப்பிய வெற்றிலை எச்சில் என்மீது பட்டுவிட்டது" என்றாள். மறுநாள் மன்னன் நமசிவாயகத்தை அரண்மனைக்கு அழைத்து; நீ அம்பிகையின் மீது வெற்றிலை எச்சிலைத் துப்பியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. நீ குற்றமற்றவன் என்பதை நிருபிக்க வேண்டும். அம்பிகையின் திருக்கரத்தில் பூவொன்றை வைத்துத் தங்கக்கயிற்றால் கட்டியுள்ளேன். நீ அம்பிகையைப் பாடுதல் வேண்டும். உன்மீது அம்பிகைக்கு அன்பிருந்தால் அம்பிகையின் கையில் கட்டப்பட்ட பூ அறுந்து உனது கரத்தில் விழவேண்டும்" என்றான்.

நமசிவாயகம் பயப்படவில்லை. கண்களை மூடியவாறு உலகமாதாவான அம்பிகையை நினைத்தப் பாடினார். அவர் பாடிமுடிந்ததும் தங்கக் கயிறு அறுந்து. பூ அவரது கையில் விழுந்தது. மன்னன் நமசிவாயகத்தின் பக்தியை மெச்சி அவரது பாதங்களைப் பணிந்தான்.

குரு நமசிவாயர், குகை நமசிவாயரின் மாணவர். ஒருநாள் பாடம் நடந்துகொண்டிருக்கும் போது குரு நமசிவாயர் பெரிதாகச் சிரித்தார். "ஏன் சிரிக்கிறாய்?" என்று குரு கேட்டார். "குருவே, திருவாரூரில் சுவாமி முன் நடனமாடிய தேவதாசி ஒருத்தி கால் வழுக்கி விழுந்துவிட்டாள். சபையோர் எல்லோரும்

சிரித்தனர். நானும் சிரித்தேன்'' என்றார். இன்னொரு நாள் அவர் இரண்டு கைகளையும் தேய்த்துக்கொண்டிருந்தார். அப்பொழுது குரு; ‘‘ஏன் உனது கைகளைத் தேய்க்கிறாய்'' என்று கேட்டார். அதற்கு அவர்; ‘‘குருவே, சிதம்பரத்தில் நடராஜப் பெருமானின் திரைச்சேலை தீப்பற்றி எரிகிறது. அங்குள்ளவர்களுடன் நானும் தீயை அணைக்கிறேன்'' என்றார். இன்னொரு நாள் குரு வாந்தி எடுத்தார். அது நிலத்தில் படக்கூடாது என்பதற்காக நமசிவாயர் அதைக் கையில் ஏந்தி விழுங்கிவிட்டார். இதனால் நவசிவாயரின் பரிபக்குவ நிலையை உணர்ந்த குரு; ‘‘சிதம்பரத்திற்குச் சென்று தவஞ்செய்'' என்று கூறினார்.

சிதம்பரத்தில் இவருக்குப் பசியெடுத்தது. அப்பொழுது உலகமாதாவான அம்பிகையை நினைத்துப்பாடினார். அன்னை பொற்கிண்ணத்தில் அமுது கொண்டுவந்து அவருக்கு ஊட்டினாள். பின் அவருக்குப் பசிக்கும் போதெல்லாம் அன்னையே அமுது கொண்டுவந்து கொடுப்பாள்.

மூகவி என்பவன் பிறப்பால் ஊமை. அன்னையின் அருளால் பெருங்கவிஞரானவர். இவன் நூறு பாடல்களைக் கொண்ட ஆர்யாசதகம், ‘‘பாதாரவிந்தசதகம், ஸ்துதிசதகம், கடா‘சதகம், மந்தஸ்மிதசதகம்'' போன்ற பாடல்களைப் பாடியவன். இப்பாடல்கள் அனைத்தும் அன்னை காமாட்சியின் மகிமையைக் கூறுவன. அம்பிகையின் புகழைக்கூறும் மூன்று நூல்களைப் பிரஸ்தானத்ரயம் என்பர். இதில் ஒன்று மூகவியினுடையது.

முத்துச்சுவாமி தீட்சகள் அம்பிகையின் அருளாற் பிறந்தவர். சிதம்பரநாதயோகி இவரது குரு. குரு முத்துச்சுவாமி தீட்சகருக்கு ஸ்ரீவித்தியா மந்திர உபதேசம் செய்து வேதாந்தத்தையும் உபதேசித்தவர். ஒருநாள் அவர் கங்கை நதியில் குளித்த போது கங்கை நீரில் மிதந்து வந்த வீணையொன்று இவரது கையை வந்தடைந்தது. இன்னொருநாள் இவர் திருத்தணி முருகனின் கோயிலுக்குச் சென்று யாழை மீட்டி இனிமையாகப் பாடும்போது ஒரு கிழவர் அவரின் முன்னே

வந்து அவரது வாய்க்குள்க் கற்கண்டைப் போட்டார். தீட்சிகர் வியந்து நிற்க அவர் முன் மயில்வாகனத்தில் முருகன் தோன்றினார்.

இவர் காமாட்சியம்மனின் சன்னிதானத்தில் ‘காஞ்சதனாயாதீ என்ற கலாமனோகரி கீர்த்தனையைப் பாடுவார். திருவாவூரில் கோயில் கொண்டிருக்கும் கமலாம்பிகை அம்பாளின் மீது கமலாம்பாள் நவாவரணகீதங்கள் பாடி வழிபட்டார். இக்கீர்த்தனங்கள் தாந்திரிக மார்க்கத்தில் தேவியை வழிபடுவோருக்கு இஷ்டசித்திகளை வழங்கும் அருளமுதமாகும்.

சங்கீத மூர்த்திகளில் ஒருவரெனப் போற்றப்படும் முத்துச்சுவாமிதீட்சகர் தனது தம்பியாரின் திருமணத்திற்காக எட்டயபுரம் சென்றார். எட்டயபுரத்தில் மழை பெய்யாமையால் பயிர்களும், மக்களது மனதும் வாடியிருக்கக் கண்டு சகிக்காது அங்குள்ள அம்பிகையின் ஆலயத்துக்குச் சென்று அமிர்தவர்ஷினி இராகத்தில் அம்பிகையைப் போற்றிப் பாடினார். அதனால் மகிழ்ந்த அம்பிகை மழை முகிலாகிப் பெருமழை பொழிந்தாள்.

உலகமாதாவான அம்பிகை உலகம் உய்யும் பொருட்டும், உலக உயிர்கள் இன்பம் பெறும் பொருட்டும் செய்த அருட்செயல்களைப் பார்த்தோம். அத்துடன் அம்பிகைகளைப் பூசித்து அருள்பெற்ற அருளாளர்களைப் பற்றியும் பார்த்தோம். இவர்கள் எல்லோரும் சிவசக்தியான அம்மைதான் முழுமுதற் கடவுள் என உணர்ந்து பெரும்பேறு பெற்றனர். இந்த வகையில் மானிடனாகப் பிறந்த எல்லோரும் இன்புற்று வாழ உலக மாதாவான அம்பிகையைப் போற்றுவோமாக.


Distributed By :
LANKA BOOK DEPOT
F.L. 1.14, Dias Place,
Gunasingapura,
Colombo - 12.
Tel : 011-2-341942
PRICE : 120.00